# ஜகம் புகழும் புண்ணிய கதை



ஸ்வப்ரகாச

(எஸ். ஜெயந்திநாதன்)

# ஜகம் புகழும் புண்ணிய கதை

இந்து சமய மன்றம்,
நந்திவரம் - கூடுவாஞ்சேரி கிளை.

ஸ்வப்ரகாச

(எஸ். ஜெயந்திநாதன்)

விலை ரூ 3-00

முதற் பதிப்பு : மே, 1988

அச்சிட்டோர் :

*P.K. பிரிண்டர்ஸ்,*
*263, கீழமாரட் வீதி,*
மதுரை—625 001.

சமர்ப்பணம்



நடமாடும் தெய்வம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஸ்ரீ பரமாச்சாரியாரின் பாத கமலங்களில் இந்நூலை பக்தியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

— ஆசிரியன்

## ஆசியுரை



"ஜகம் புகழும் புண்ணிய கதை" புத்தக உருவில் வெளிக் கொணருவது அறிய சந்தோஷம். மக்களுக்கு கிடைத்தற்கரிய பொக்கிஷமெனலாம்.

**ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள்**
ஸ்கந்தகிரி
*சேலம்—636 140.*
11—4—88

## பதிப்புரை

பேரன்புடையீர்,

வணக்கம். ''ஜகம் புகழும் புண்ணிய கதை'' எனது மூன்ருவது நூல். இராமாயண காவியத்தை அதன் சம்பவங்கள் சிதையாமல், சிறிய அளவில் நூலாக வெளியிட வேண்டுமென்ற எனது எண்ணம் நிறைவேறி இன்று இந்நூல் உங்கள் கைகளில் தவழ்கிறது.

''ஆண்டவன் அருள்'' என்கின்ற ஆன்மீக மாதப் பத்திரிகையில் ''ஜகம் புகழும் புண்ணிய கதை'' என்ற இப்புத்தகத் தலைப்பிலேயே தொடர் கட்டுரை எழுதி வந்தேன்.

எனக்கு வால்மீகியையும், கம்பனையும் தொட்டு உணரக் கூடிய பேராற்றல் இல்லை. ஆகையால் என் ஆசானுக சக்ரவர்த்தி ஸ்ரீ.சி. ராஜகோபாலாச்சாரியாரை வரித்துக் கொண்டு. அவரது நூலான சக்ரவர்த்தித் திருமகனை துணைக்கு எடுத்துக் கொண்டுள்ளேன்.

இப்படி ஒரு நூலை வெளியிட விரும்புகிறேன்..., என்று சொன்ன மாத்திரத்தில், எனக்குக் கிடைத்த வாழ்த்துக்களும், உதவிகளும் என்னை பரவசப்படுத்து-கின்றன.

இந்நூலுக்கு ஸ்ரீமத் ஸத்குரு ஸ்ரீசாந்தானந்தா ஸ்வாமிகள் ஆசிகள் வழங்கியுள்ளார்— நான் பாக்ய-வானுகியிருக்கிறேன்.

இந்த நூலை வெளியிடும் இந்நேரத்தில், எனக்கு ''ஸ்வப்ரகாச'' என்ற புனைப்பெயர் சூட்டி பல ஆன்மீகக் கட்டுரைகளை எழுதத் தூண்டுகோலாக அமைந்த என்

ஞானகுரு நாதர் ஸ்ரீசிருங்கேரி ஸ்ரீசாரதா பீட நாயகர் ஸ்ரீசந்நிதானம் ஸ்ரீபாரதி தீர்த்த ஸ்வாமிகளை என் நெஞ்சாரத் தொழுது நிற்கிறேன்.

இந்நூல் வெளிவர பல வகைகளிலும் உதவி செய்த ''ஆண்டவன்அருள்'' ஆசிரியரும் எனது மூத்த சகோதரருமான ஸ்ரீஷண்முக பாரதி (கார்க்கி), மேற்படி பத்திரிகை வெளியீட்டாளர் திரு. ஜி. எம். சுந்தரம், திருமதி. தேவகிராஜு, திருமதி. ஆயிஅம்மாள், திருமதி. சொர்ணம் சொக்கலிங்கம், திருமிகு. கே. ரங்கநாதன், திரு. எஸ். ரவிச்சந்திரன், திரு.பி எஸ். துவாரகநாத், பரணி பதிப்பக உரிமையாளர் திரு. பா.இராமச்சந்திரன், திருவாளர்கள் எஸ். கே. ராமமூர்த்தி அன் கோ (மதுரை) மற்றும் இந்நூலை குறுகிய கால அவகாசத்தில் அழகாக அச்சிட்டுத்தந்திருக்கிற P. K. பிரிண்டர்ஸ் உரிமையாளர் T. கேசவன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடமாடும் தெய்வம் ஸ்ரீகாஞ்சி மாமுனிவரின் பாத கமலங்களில் சமர்ப்பிக்கப்படும் இந்நூலைப் படிக்கும் அன்பர்கள் அனைவருக்கும் எல்லா நலன்களும் கிடைத்தருள பகவான் ஸ்ரீ ராமபிரானையும், ஞானத் திரிவேணி சங்கமமாக விளங்கும் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீட நாயகர்களையும் போற்றித் துதிக்கின்றேன்.

பிரியங்களுடன்

**ஸ்வப்ரகாச**

**(எஸ்.ஜெயந்தி நாதன்)**

ஸ்ரீசாரதா இல்லம்
16- காமராஜர்தெரு
பல்லவன் நகர்
மதுரை–625 016

# ஜகம் புகழும் புண்ணிய கதை

## கோசல தேசம் :

கங்கைக்கு வடபுலத்தில் சரயுநதி. அது கோசல தேசத்தின் ஜீவநாடி. ''அயோத்தி'' என்பது அந்த தேசத்தின் தலைநகர். ''யுத்தத்தால் வெல்ல முடியாத'' என்ற பெயர்ப் பொருளோடு நிர்ணயிக்கப்பட்ட பொலிவான புதுநகரம் அது! அழகான ஆரண்யங்களும், நந்தவனங்களும், பச்சை வயல்களும் இயற்கை மனதார அந்த தேசத்திற்கு அள்ளிக் கொடுத்திருந்தது! கோட்டை, கொத்தளம், அகழிகள், மனித முயற்சிகளை இலகுவாக்கும் எந்திர சாதனங்கள், மதி நுட்பமிக்க மந்திரிகள், புனித முனி புவங்கர்கள், வீரமிக்க சேனாதிபதிகள், சீலம் மிக்க குடிமகன்கள், சரியான தர்ம நீதி ஸ்தாபனங்கள், வேதம் காக்கும் புனித பாடசாலைகள் - இப்படி பல சிறப்புகளை தன்னகத்தே பெற்றிருந்த கோசல தேசத்தை சூரிய குலத்துச்சக்ரவர்த்தி தசரதன் ஆண்டு வந்தான். ஆம் – தர்மம் தலை நிமிர்ந்து அங்கே வாழ்ந்து கொண்டிருந்தது.

## இறைவன் மனிதனானான்

அது வசந்த ருது. தசரதன் ஒரு ஆரண்யத்தில் ஏகாந்தமாய் வேட்டையாட வந்தான். தங்களின் சிருங்காரக் குழந்தைகளுடன் பலவிதமான பிராணிகள் மகிழ்ச்சியோடு திரிந்து கொண்டிருந்தன. செடிகள் தங்கள் சிருஷ்டிகளாக வண்ணப் பூக்களை கொத்துக் கொத்தாக தங்கள் நுனியில் வைத்துக் கொண்டு வாயுதேவனின் துணையால் யாருடைய பாட்டையோ ரசிப்பது போல் தலையாட்டிக் கொண்டிருந்தன. வில்லை எடுத்து வேட்டை-

யாட வேண்டிய தசரதன் துக்கம் கொண்டான். பரப்-பிரம்மமே சிருஷ்டி கர்த்தாவாக இருந்தாலும், படைப்-பிற்கு அது ஏதாவது ஒரு ஸ்தூல சரீரத்தை அல்லவா பயன்படுத்திக் கொள்கிறது? ஓரறிவுள்ள தாவரங்கள், ஐந்தறிவுள்ள பிராணிகள், ஆறறிவுள்ள மனிதர்கள்-இப்படி பலவற்றையும் அதனதன், அவரவர் இன-விருத்திக்கு பயன்படுத்திக் கொள்ளும் இறைவன், தன் மூலம் ஒரு சிருஷ்டியை உருவாக்க இதுவரை திருவுளம் கொள்ளாதது பற்றி சக்ரவர்த்தி தசரதன் வருந்தினான். அரண்மனை அந்தப்புரத்தில் இப்படி ஒரு நினைவோடு பலகாலம் யோசனை செய்தான். சீலம் மிக்க தவரிஷிகளை அழைத்து ஆலோசனை செய்தான். முடிவு பிறந்தது. அசுவமேதயாகமும், புத்திர காமேஷ்டியும் ரிஷ்யசிருங்க முனிவர் தலைமையில் நடக்க ஏற்பாடானது. புதுநகர் புதுமைப் பொலிவோடு யாகத்திற்காக உதயமானது.

அதே சமயம்-

நான்முகனின் திருச்சபையில் தேவர்கள் பலரும் கூடி, அவனிடம் இராவணின் பொல்லாத அரக்க நட-வடிக்கைகளைப் பற்றி புலம்பித் தீர்த்தனர். தான் கொடுத்த வரத்தின் எதிர் விளைவுகளைக் கண்டு வருத்திய பிரமன் தேவர்களைத் தேற்றினான். ''வரம் கேட்ட இராவணன் மனிதனை மறந்து விட்டான். அவனது நித்யத்துவத்தை மனிதனால் நிச்சயம் முடிவுக்கு கொண்டு வர முடியும். மனிதனை அற்பமாய் மதித்த அவனது திமிருக்காக மனிதனாலேயே மரணம் சம்பவிக்கட்டும்'' என்றான். பிறகு தேவர்கள் ஓரளவு திருப்தியோடு திருமாலை நோக்கி பயணப்பட்டனர். யானையின் அழுகுரலுக்கே ஓடோடி வந்து அபயம் அளித்தவனாயிற்றே அந்த நாராயணன் தேவர்களுக்கா மனமிரங்க மாட்டான்?



''நன்மை உங்களுக்கு உண்டாகட்டும். தசரதன் நடத்தும் வேள்வியின் பலனாய் நானே நான்கு மனிதர்-களாய் அவதரித்து உங்கள் குறை தீர்ப்பேன்'' என்றான் நாராயணன்.

ரிஷ்ய சிருங்கரின் புனிதத் தலைமையில் வேள்வித் தீ விண்ணை முட்டி நின்றது. வேள்விப் புகையும், வேத சப்தங்களும் பிரபஞ்சம் முழுவதும் பரவி நின்றன. திடீரென ஒரு அதிசயம். அக்னிக் குண்டத்திலிருந்து ஒரு தெய்வீக உருவம் தங்கக் கோப்பையோடு தலை நிமிர்ந்து நின்றது. தசரதனை அழைத்து பாயசம் நிரம்பியிருந்த அந்த தங்கக் கோப்பையை வேள்வியின் பரிசாய் அளித்து புத்திர பாக்கியம் பெறுவதற்கான கட்டியம் கூறி மறைந்தது. கோசல தேசமே மகிழ்ந்தது. தெய்வ கட்டளைப்படி பாயசம் அருந்திய தசரத மனைவிகள் கர்ப்பம் கொண்டனர். கௌசல்யா தேவி புனித ராமனை ஈன்றாள். கைகேயி பரதனைப் பெற்றாள். சுமத்திரா தேவி லெட்சுமணனுக்கும், சத்ருகனனுக்கும் தாயானாள். தசரதன் மகிழ்ந்தான். தேவர்கள் மகிழ்ந்து பரந்தாமனைப் போற்றினர்.

## சிறுபிரிவு-சிறப்பிற்காக...

தெய்வக் குழந்தைகள் நால்வரும் தெய்வ குமாரர்-களாக பரிணமித்தனர். ஒரு தேவ வேளையில் தசரதன் சபைக்கு விசுவாமித்திரர் வந்து சேர்ந்தார். தவ-வலிமையின் சிகரம் தசரதன் சபைக்கு வந்தது பற்றி அனைவரும் மகிழ்ந்தனர். தசரதன் தன் விசாலமான இதயத்தால் வணங்கி வரவேற்றான். வருகையின் நோக்கம் எதுவானாலும் தவறாமல் தந்திடுவேன்'' என்று கூறி விசுவாமித்திரரை அமர்த்தினான் தசரதன். கௌசிக மகாராஜனாய் இருந்து கடுந்தவத்தால் மகாபலமும்,

கோபத்தால் தவபலவிரையமும் மாறி மாறிப் பெற்று கடைசியில் வசிஷ்டர் வாயாலேயே ''பிரம்மரிஷி'' என்று அழைக்கப்பட்டவர் விசுவாமித்திரர்.

''நியமம் பூண்டு வேள்வி ஒன்று ஆரம்பித்துள்ளேன். மாரீசனும், சுபாஹீவும் தங்கள் அரக்க குல வழக்கப்படி என் யாகத்தை அசுத்தப்படுத்துகிறார்கள். என்னுடைய தற்கால நியமம் காரணமாக என் பலத்தை உபயோக-ப்படுத்தக் கூடாது. எனவே என் வேள்வி காக்கும் பொருட்டு நம் ராமனை என்னுடன் அனுப்பி வைத்து பெரும்புகழ் பெறுவீர்'' என்றார் விசுவாமித்திரர்.

தசரதன் ராமனின் இளவயது காரணமாய் கலக்கமுற்று, ராமனுக்குப் பதில் தானே ''வேள்வி காக்கிறேன்'' என்றான். விசுவாமித்திரர் மறுத்து விட வசிஷ்டமாமுனிவர் தலையிட்டு தசரதனிடம் ''நீங்கள் ராமனை மட்டுமல்ல; லெட்சுமணனையும் முனிவரோடு அனுப்பி வையுங்கள். உங்கள் குமாரர்களின் எதிர்காலச் சிறப்புக்கு இந்தப் பயணம் வழி வகுக்கும் என்றார். ராம லெட்சுமணர்கள் தசரதனிடமும் மற்றவர்களிடமும் விடை பெற்றுக் கொண்டு, இளஞ்சிங்கங்களைப் போல் மாமுனிவரின் அடி ஒற்றி பயணப்பட்டனர். தசரதன் ராமலெட்சுமணர்களது பிரிவிற்காக வருந்தினான். அந்தச் சிறு பிரிவு ''சிறப்பிற்காக' என்பது பின்னீடு தான் அவனுக்குத் தெரிய வரும்

**பயணம்**

வீரமும், தவமும் கை! கோர்த்து, கங்கையைக் கடந்து தாடகாவனம் வந்து சேர்ந்தனர். அகஸ்தியர் சாபத்தால் பீடிக்கப்பட்ட தாடகையின் ! கொடுஞ் செயல் -கள் கேட்டு கொதித்தான் ராமன். பெண்ணைக் கொல்வது



ராஜதர்மம் இல்லையென்றாலும், ''தர்ம விரோதியாய் யார் இருந்தாலும் விலங்குகளைப் போல் வேட்டையாடப் பட வேண்டியவர்களே'' என்ற மூல மந்திரங்களை ராம-லெட்சுமணர்கள் விசுவாமித்திரர் மூலம் உபதேசம் பெற்றனர். பலவிதமான பலம் வாய்ந்த அஸ்திரப் பயிற்சியை முனிவர் மூலம் பெற்றுத் தேர்ந்தனர் ராஜ-குமாரர்கள். சகல அஸ்திர தேவதைகளும், ராமனிடம் சரணடைந்தது பற்றி மகிழ்ச்சி கொண்டிருந்தன! ஒரு அந்தி வேளையில் ராமனின் பாணங்களுக்கு தாடகை பலியாகி தாடகாவனம் தேவமயமாய் பிரகாசித்தது. ரிஷிகள் மகிழ்ந்தனர்.

பிறகு அனைவரும் வேள்வி நடக்கும் சித்தாசிரமம் வந்தடைந்தனர். ஆதிநாராயணன் வாமனனாய் மகாபலி சக்ரவர்த்தியை ஆட்கொள்ள அவதரித்த இடம் அது.

ராமலெட்சுமணர்கள் விசுவாசமித்திரரின் ஆறுநாள் யாகத்தை கண் துஞ்சாமல் காத்தனர். மாரீசனும், சுபாஹீவும் மாமிசங்களுடன் யாகச்சூழ்நிலையை அசுத்தப் படுத்த ஆகாய மார்க்கமாய் வந்து சேர்ந்தனர்.

ராமனின் மானவாஸ்திரத்தால் மாரீசன் பல மைல்கள் தாண்டி மயக்கமாய் வீழ்ந்தான்.

ஆக்னேயாஸ்திரத்தால் சுபாஹீ, உயிர் துறந்தான். வேள்வி காத்த வீரகுமாரர்களை விசுவாமித்திரர் உச்சி மோர்ந்து வாழ்த்தினார்.

அடுத்த கட்டளைக்காக முனிவரிடம் ஏங்கி நின்ற ராமனிடம் சிரித்துக் கொண்டே சொன்னார் விசுவாமித்திரர்... ''மிதிலை செல்வோம். ஜனக மகாராஜனின் அற்புத வில்லைப் பார்ப்போமே?'' என்று!- வில்லை மட்டும் தானா?

## சீதை

விசுவாமித்திரரும், ராமலெட்சுமணர்களும் முனிபுவங்கர்களோடு ஜனகரின் யாகத்தில் பங்கு கொள்ள மிதிலை நோக்கிப் பயணப்பட்டனர். வழியெங்கும் பல சிறப்பான விஷயதானங்களை விசுவாமித்திரர் ராஜகுமாரர்களுக்கு வழங்கினர் கங்கையின் சிறப்பையும் பகீரதனின் தளராத முயற்சியையும் முனிவர் மூலம் கேட்டு மகிழ்ந்தனர் தசரத புத்திரர்கள்.

கௌதம முனிவரின் ஆளில்லா ஆசிரமத்தை வழியில் கண்டனர் அகலிகை கதை கேட்டு ஆசிரமத்தில் ராமன் கால் பதிக்க. அதுவரை முனிவரும் அவளது கணவருமான கௌதமனின் சாப விமோசன உத்திரவுப்படி அருபீயாய் இருந்த அகலிகை வதனமும், வனப்பும் பெற்று ராமனை வணங்கி நின்றாள். தெய்வ குமாரன் ராமனின் ஆற்றலைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர். பின் மிதிலை வந்து சேர்ந்தனர்.

விதேஹ மன்னன், பிரம்மஞானி ராஜரிஷி-இப்படிப் பல பெயர் பொருத்தத்துடன் கூடிய ஜனக மகாராஜா, யாகம் ஒன்று நடத்த விரும்பி பூமியைத் தன் கையால் கலப்பை பிடித்து உழுதார். புழுதி போர்த்திய நிலையில் ஒரு அழகான பெண் குழந்தை பூமிக்கடியில் இருக்கக் கண்டு மகிழ்ந்து, அதற்கு சீதை என்று பெயர் இட்டார். அதுவரை குழந்தைப் பேறு இல்லாத ஜனகரும், அவரது பட்ட மகிஷியும் மனமகிழ்ந்து இறைவனின் பிரசாதமான சீதையை கண்மணி போல் காத்து வளர்த்து வந்தனர். தெய்வக் குழந்தை திருக்-குமாரியாய் வளர்ந்து விட்டாள். அவளுக்கு திருமணம் செய்து வைக்க ஜனகர் தீர்மானித்தார்.



ஒருமுறை வருணபகவான் ஜனகருடைய யாகத்-தைப் பாராட்டி ஒரு தெய்வ வில்லை பரிசாக அளித்-திருந்தான். சீதையை மண முடிப்பவன் மகாபலசாலியும் சீலம் நிறைந்தவனும் இருக்க நினைத்த ஜனகர் ஒரு முடிவிற்கு வந்தார்.

வருணனின் பரிசான சிவதனுசுவை யார் நாண் எற்றி நிற்கிறானோ அவனுக்கே தன் கண்மணி சீதாவை மணம் புரிய வைப்பேன் என்று பரவலாக அறிவித்திருந்-தான். பல ராஜகுமாரர்கள் ஜனகனுடைய அரசசபை வந்து சிவதனுசுவை அசைக்கக் கூட முடியாமல் திரும்பினர். நாண் ஏற்றமுடியாமல் நாணிப் போய் ஓடிப் போனவர்கள் கணக்கிலடங்காது.

## சீதா கல்யாணம்

ஜனகர் தன் யாகத்தில் பங்கு கொள்ள விசுவா-மித்திரரும், ராமலெட்சுமணர்களும் வந்திருப்பது அறிந்து மகிழ்ந்து அவர்களை உபசரித்தான். ஜனகரிடம் தசரத புத்திரர்களை முனிவர் அறிமுகம் செய்து வைத்தார். பல விஷயங்கள் பேசிய பின் சிவதனுசு பற்றி பேச்சு எழுந்தது. ''என்னுடைய ராமன் அந்த வில்லின் நாணை இழுக்கத் தயார்'' என்று முனிவர் ஜனகரிடம் சொல்ல சபை கூடியது.

ஆயிரக்கணக்கானோர் அந்த தெய்வ வில் அடங்கிய பெட்டியை சகல மரியாதைகளுடன் ஒரு வண்டியின் மீது வைத்து இழுத்து வந்தனர். ராமன் முனிவரைப் பார்த்-தான். விசுவாமித்திரர் ஆசி கூறி கையை உயர்த்தினார். பல ஆயிரக்கணக்கான கண்கள் ராமன் மேல் பதிந்து இருக்க ராமன் பெட்டியைத் திறந்து வில்லை எடுத்து நிமிர்த்திப் பிடித்தான்.

நாணைப் பிடித்து தன் காது வரை இழுத்தான். வில் பலத்த ஓசையோடு உடைந்து விழுந்தது. மண்டபம் கையொலியால் கலகலத்தது. மிதிலை மக்கள் மகிழ்ந்தனர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். ஜனகர் குதூகலித்தார். எங்கும் எழுச்சிக் கோலம்.

தசரதனுக்கு தகவல் சொல்ல ஜனகரின் ஆட்கள் விரைந்து சென்றனர். தசரதனும், அவனது பத்தினிகளும் செய்திகேட்டு மகிழ்ந்தனர். தன் பரிவாரங்களோடு மிதிலை நோக்கிப் புறப்பட்டான் தசரதன்.

ஜனகரின் யாகம் முடிந்த பிறகு சீதா திருக்கல்யாணம் சீரோடும், சிறப்போடும் நடந்து முடிந்தது. பிரபஞ்சம் முழுவதும் மகிழ்ச்சி அலைகள் வியாபித்தது.

## அயோத்திக்குத் திரும்புதல்

விசுவாமித்திரரின் யாகம் காக்கப் புறப்பட்ட ராமன் சீதா ராமனாக மிதிலையிலிருந்து அயோத்திக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். தசரதனும் பெரும் பரிவாரமும் கோலாகலமாக அயோத்திக்கு வந்து கொண்டிருந்தனர்.

ஜமதக்கினி முனிவரின் புதல்வரும், க்ஷத்திரிய குலத்தை கூண்டோடு ஒழிக்க சத்திய விரதம் காத்து வந்தவருமான பரசுராமன் ராமனை எதிர் கொண்டான். தோளில் கோடாரியும், வில்லும், ஒரு கையில் அம்பும் கண்களில் கோபாக்னியும் சுமந்து கொண்டு பேசினான்.

''ஏ... க்ஷத்திரிய ராமா! நீ மிதிலையில் சிவதனுசுவை உடைத்ததற்கு பாராட்டுக்கள். இதோ என் கையிலிருக்கும் இந்த விஷ்ணு தனுசு என் தந்தை தன் தவத்தால் பெற்றது. இதை நீ நாண் இழுப்பாயா? என்றான்.



தசரதன் துக்கம் கொண்டு சமாதானமாய்ப் பேசினான். பரசுராமனுக்கு ராமனைத் தவிர யாரிடமும் பேச மனது ஒப்பவில்லை. ராமன் சிரித்துக் கொண்டே பரசுராமனிடமிருந்து விஷ்ணு தனுசுவை வாங்கி ஒரு பாணத்தை வைத்து நாணை இழுத்தான். அதே சமயத்தில், பரசுராமனின் அவதார சக்தி மறைந்தது. பரசுராமன் ராமனை வணங்கி விட்டு சூரிய அஸ்தமனத்திற்கு முன்பாக பயணப்பட்டான். தசரதனும், பரிவாரங்களும் மகிழ்ந்தனர்.

தசரதச் சக்ரவர்த்தியையும், அவனது குமாரர்களையும், புதிய வரவான சீதையையும் வரவேற்க அயோத்தி தயாரானது. எங்கும் மகிழ்ச்சி வெள்ளம், புளகாங்கிதம், கோலாகலம், வாண வேடிக்கை, மத்தள மேளங்களின் நாத வெள்ளம், இத்யாதிகளுடன் அயோத்தி மாநகரம் அலங்கரிக்கப்பட்டு இருந்தது.

தெய்வத் தம்பதிகள் பன்னிரண்டு ஆண்டு காலங்கள் சுகமாகவும், சொந்த பந்தங்களின் அன்பு மழையில் நனைந்து கொண்டும் வாழ்ந்து வந்தனர்.

## இளவரசர் பட்டம்

தசரதன் தன் முதுமையை உணரத்தொடங்கினான். ராமனை இளவரசராக்கி நாட்டை பரிபாலனம் செய்வது தான் சிறப்பு என்று முடிவு செய்து கொண்டான். குறிப்பிட்ட மந்திரிகளிடம் விபரத்தைச் சொன்னான். கேட்டவர்கள் மகிழ்ந்து ஒருமுகமாக தசரதனின் கருத்தை வரவேற்றனர். ரிஷிகளும், அறிஞர்களும், பன்னாட்டு சிநேகித மன்னர்களும், மந்திரிப்பிரதானிகளும், குடி மக்களும் தசரதனால் நிர்ணயிக்கப்பட்ட நாளன்று ராஜ சபையில் கூடினார்கள். தசரதன் தன் விருப்பத்தை சொல்ல ராஜசபை ஒருமித்து கரகோஷம் செய்து ஆமோதித்தது.

ராமன் தகவல் அறிந்து 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்று இளவரசுப் பட்டம் பெற ஒப்புதல் தந்தான்.

ஊரெல்லாம் மகிழ்ந்திருக்க தசரதன் மனம் மட்டும் இனம் புரியாத ஒரு கலக்கத்தில் தோயந்திருந்தது. பரதன் தன் மாமனின் தேசமான கேகய நாட்டிற்குச் சென்றிருந்தான். அவன் இல்லாத ஒரு குறையைத் தவிர, மற்ற சூழ்நிலைகள் சரியாயிருந்தபடியால் மறுநாளே ராமன் இளவரசர் பட்டம் பெற முடிவு செய்தான் தசரதன்.

சீதையும், ராமனும், கௌசல்யா தேவியும் விழாவின் பூர்வாங்க நடை முறையையும் அனுசரித்து முதல்நாள் உபவாச விரதத்தை வசிஷ்டரின் முன்னிலையில் துவக்கினர். மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளை தீபங்களால் அலங்கரித்தனர். நகரமெங்கும் திருவிழாக்கோலம்.

மக்கள் ஒவ்வொருவரின் மனதிலும்மறுநாள் நடக்கப் போகும் ராமனின் பட்டாபிஷேகம் பற்றிய நினைப்பு மட்டுமே மேலோங்கி இருந்தது.

**கூனி**

மந்தரை என்ற கூனியம்மாள் கைகேயிக்கு தூரத்து உறவு முறையாவாள். கைகேயியின் அந்தப்புரத்தில் குற்றேவல் செய்து வந்தாள். நல்ல பயிர்களுக்கு நடுவில் களையிருப்பது போல் அவளும் அரண்மனையில் இருந்து வந்தாள்.

ராமனின் பட்டாபிஷேக நிகழ்ச்சி அறிந்து கைகேயி சந்தோஷத்தில் திளைத்திருந்தாள். அனைவருடைய மகிழ்ச்சியையும் நொடிப்பொழுதில் வீணாக்க கூனி யோசனை செய்தாள். விஷச் செடி நல்ல மாங்கனியைத் தருமா? அதே போல் கெடுமதி கொண்ட கூனி



விஷத்தைக் கக்கினாள். ஆம்!ராமன் யுவராஜா ஆனவுடன், பரதனின் வாழ்வும், கைகேயியின் வாழ்வும் தானாகவே தாழ்ந்து விடும் என்ற கருத்தை கைகேயியின் மனதில் பதிய வைத்தாள்.

எறும்பு ஊரக் கல்லும் தேயுமல்லவா? அதே போல் உத்தம மனம் கொண்ட கைகேயியும் கூனியின் போதனையால் மாறி விட்டாள். ''பரதன் இல்லாத போது ராமனுக்கு பட்டம் தரவேண்டிய அவசரமும் அவசியமும் சதியைத் தவிர வேறில்லை'' என்று நீட்டி முழக்கி கைகேயியின் உள்ளத்தை ஆக்ரமித்துக் கொண்டாள் கூனி.

சூழ்நிலையால் மதியிழந்த கைகேயி, பரதன் நாடாள வழி கேட்டாள். தான் போட்ட விதை உடனே முளைவிட்டதை உணர்ந்து கூனி சொன்னாள்... ''முன்னொரு நாள் இந்திரனுக்குத் துணையாக சம்பனோடு யுத்தம் செய்து உடலெல்லாம் அடிபட்டு மயங்கிய நிலையில் இருந்த உன் புருஷனான தசரதனை நீ யுத்தகளத்திலிருந்து தேரோடு கடத்திக் காப்பாற்றிய போது...'' என்று நிறுத்தினாள்.

''ஆம். ஞாபகம் வந்தது. அன்று என் கணவர் இரண்டு வரம் தருகிறேன் என்றார். நான் பின்னீடு தேவைப்படும் பொழுது இரண்டு வரங்களையும் கேட்டு பயனடைகிறேன் என்றேன். இப்போதும் அந்த நிகழ்ச்சி என் மனதில் நீங்காமல் உள்ளது'' என்று கைகேயி சொல்ல அர்த்த, புஷ்டியோடு கூனிரி சித்தாள்.

''அந்த வரங்களைக் கொண்டு நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?'' என்றாள் கைகேயி.

கூனி கூசாமல் சொன்னுள்... ''முதல் வரமாக பரதனுக்கு முடிசூட்டச் சொல். இரண்டாவது வரமாக ராமனை பதினன்கு ஆண்டுகள் வனவாசம் செல்ல உத்திர-விடச் சொல். தசரதன் பலவாருக உன்னை சமாளிப்பான் வெகுளிப் பெண்ணே! ஏமாந்து விடாதே. உன் எதிர் கால வாழ்வைக் கருதி தான் இப்படி நான் யோசனை சொல்கிறேன்...''

## வரம் தந்த வேதனை...

தனது அந்தப்புரத்தில் கைகேயி சகல ஆபரணங்-களையும், நல்ல உடையையும் களைந்துவிட்டு தலைவிரி கோலமாய் தரையில் படுத்துக்கொண்டாள். மறுநாள் நடக்கப்போகும் ராமனின் இளவரசுப் பட்டத்திற்கு வேண்டிய அனைத்து வேலைகளையும் சரியாக நடந்து கொண்டிருக்கிறதா என பார்வையிட்டுவிட்டு கைகேயியின் அந்தப்புரத்திற்கு வந்து சேர்ந்தான் தசரதன். சுகம் நாடி வந்தவனை துக்கம் வரவேற்றது. கைகேயியின் நிலையைக் கண்டு அதிர்ச்சியால் மனம் நொந்தான் தசரதன்.

''என் உயிரே! இது என்ன கோலம்? உனக்கு என்ன வேண்டும்? பதினன்கு உலகத்தில் நீ எதை விரும்பிக் கேட்டாலும் உடன் தந்திடுவேனே?'' என்று செல்லமாகக் கொஞ்சி தன் மடியில் அவள் தலையைக் கிடத்திக் கொண்டான் தசரதன். கைகேயி மறுமொழி கூருமல் விசும்ப மட்டும் செய்தாள்.

தசரதன் கலக்கம் கொண்டு விசாரிக்க கைகேயி பேசினள்... ''அன்ருெரு நாள் எனக்கு இரு வரங்கள் கேட்க அனுமதித்தீரே? நினைவிருக்கிறதா? என்று யுத்த கள விஷயத்தை நினைவுபடுத்தினள். ''ஆமாம் கண்ணே! என்ன வேண்டும் சொல். என் உயிர் ராமன் மீது ஆணை-யாக நீ கேட்கும் இரு வரங்களையும் நான் நிறை வேற்றுவேன்.'' என்ருன் தசரதன்.



கைகேயி ஒரே மூச்சில் சொன்னுள்–''ராமனுக்குப் பதில் பரதன் முடி சூடவேண்டும். ராமன் பதினன்கு ஆண்டுகள் வனம் செல்ல வேண்டும்...''என்று.

தசரதன் நடப்பது கனவா அல்லது நனவா என்று தெரியாமல் விழித்தான். லட்சக்கணக்கான இடிகள் ஒரு சேர தன் தலையில் விழுந்த மாதிரி உணர்ந்தான். நினைவு தவறுவதும், வருவதுமாக கண்ணுமூச்சி ஆடியது. ஒருவாருக அதிர்ச்சியிலிருந்து மீண்ட தசரதன் சன்னமான குரலில் பேசினன். ''பிசாசே! உனக்கு என்ன நேர்ந்தது? உன் அன்புக்கு பாத்திரமான ராமனுக்கா இப்படி கொடுமை செய்கிருய்? உனக்கு துர்போதனை செய்தது யார்?...'' என்று கண்ணீர் மல்க புலம்பினன்.

கைகேயி துளிக்கூட மனம் கலங்கரமல் சொன்னுள். ''கேட்ட இரு வரங்களையும் உடன் நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் சத்தியம் தவறிய பாபத்துக்கு உள்ளாவீர்'' என்று...!

கைகேயியின் கொடூர மனப்பான்மையைக் கண்டு அனலில் இட்ட புழுப்போல் துடித்தான்.

என் கண்மணிராமன் காட்டுக்குப்போய், அதைத் தொடர்ந்து நான் மரணமடைவதில் உனக்கு யாது பலன்?'' என்று கைகேயியைக் கெஞ்சிக் கூத்தாடினன். அவளது தளராத மனம் கண்டு மயக்கமுற்ருன்.

## அவன்தான் ராமன்

பொழுது புலர்ந்தது. வசிஷ்டரும் மற்றவர்களும் ராமனது பட்டாபிஷேக நிகழ்ச்சிக்குத் தேவையான

முகூர்த்த சாமான்களோடு அரண்மனை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள், தசரதனை அழைத்து வர ஒரு தூதுவனை அனுப்பினார் வசிஷ்டர். கைகேயியின் அந்தப்புரத்திற்கு வந்துநின்ற தூதுவனிடம் கைகேயி பேசினாள்... ''ராமனை உடனே இங்கு வரச்சொல்'' என்று. கைகேயியின் உத்தரவுப்படி ராமன் அவளது அந்தப்புரம் வந்து சேர்ந்தான்.

இதற்கிடையில் விழாவின் காலதாமதத்திற்கான காரணம் தெரியாது ராஜ வீதியில் நின்று கொண்டிருந்த மக்கள் மனம் கலங்கினர். கைகேயியின் அறையில் தசரதன் படுத்திருக்கும் கோலத்தைக் கண்டு திடுக்கிட்ட ராமன்... ''தாயே! தந்தையாருக்கு என்ன? உடல்நிலை சரியில்லையா? தாமதியாமல் சொல்லுங்கள் தாயே...'' என்றான்

தசரதன் ராமனின் பாசமிக்க வார்த்தைகளைக் கேட்டு லேசாக கண்களைத் திறந்து கண்ணீரால் பதில் தந்தான்.

கைகேயி பேசினாள்... ''உன் தந்தையார் முன்பொரு முறை இருவரம் கேட்கும் உரிமையை எனக்குத் தந்தார். இப்போது அவரிடம் அந்த இரண்டு வரங்களையும் கேட்டு விட்டேன். அவைகளை அவர் நிறைவேற்றுவது தானே அரச தர்மம்? அந்த இரு வரங்களையும் அவர் நிறைவேற்ற உன் உதவியும் தேவைப்படுகிறது...'' என்று பீடிகையுடன் நிறுத்தினாள்.

தர்மம் பேசியது...''தந்தை சொல் கேட்டு தர்மம் காப்பேன்'' என்று.

கேட்ட இரண்டு வரங்களையும் ராமனிடம் சொன்னாள் கைகேயி.



அவளது எதிர்பார்ப்புக்கு மாறாக, ராமன் புன்னகையோடு நின்று கொண்டிருந்தான்.

''தாயே! தங்களுடையவும், தந்தையுடையவும் விருப்பம் எதுவானாலும் அதைச்செய்து முடிப்பதுதான் என் கடமை. இப்பொழுதே தங்கள் விருப்பம் போல் பரதனை அழைத்து வர ஏற்பாடு செய்கிறேன். நான் இன்றே வனம் செல்ல தயாராகிறேன்...'' என்று சொல்லி, அவளது காலையும், தசரதனின் பாதத்தையும் தொட்டு வணங்கினான்,

தசரதனுக்கு ஒரு நப்பாசை இருந்தது. துஷ்டத்தனமான வேண்டுகோளை ராமன் ஏற்க மறுத்து தானே மகுடம் தரிப்பான் என்று கடுகளவு நம்பிக்கையை தசரதன் வைத்திருந்தான். அதுவும் வீண் போகவே மறுபடி மூர்ச்சையானான், தசரதன்.

கைகேயியின் அந்தப்புர வாசலில் நின்று அனைத்து விபரத்தையும் தெரிந்து கொண்ட லெட்சுமணன் கொதித்தெழுந்தான். ராமன் அவனை சமாதானம் செய்து அவனை இழுத்துக் கொண்டு விசேஷம் நடக்கவிருந்த இடத்திற்கு வந்து அனைவரையும் கலைந்து செல்லச் சொன்னான். பிறகு தன் தாயான கௌசல்யா தேவியைச் சந்திக்க ராமன், லெட்சுமணன் துணையோடு வந்தான்.

**வனவாசம்**

அன்னை கௌசல்யாதேவி வெண்பட்டு அணிந்து விழாக் கோலமாய் இருந்தாள். கைகேயியின் அந்தப்புரத்தில் நடந்த நிகழ்ச்சிகளைச் சொல்லிவிட்டு தான் வனவாசம் செல்ல ஆசி கோரி நின்றான் ராமன். துக்கத்தால் 'ஓ' வெனக் கதறியழுதாள் கௌசல்யா. தானும் வனவாசம் வர ராமனிடம் கேட்டாள். ''தந்தை இருக்கும்

இடம்தான் தங்களுக்கு நிரந்தரமான இடமாகும்...' என்று அவளைச் சமாதானப்படுத்தினான் ராமன்.

பொறுமையின் எல்லையைக் கடந்து விட்ட லெட்சுமணன் கோபமடைந்து பேசினான். ''கிழட்டுச் சக்ரவர்த்தியை என் பராக்கிரமத்தால் பதவியிலிருந்து எறிந்துவிட்டு உங்களுக்குப்பட்டம் சூட்டுவேன்...'' என்று ராமனைப் பார்த்துக் கூறினான்.

ராமன், வேத சாஸ்திரங்களையும், விதியின் பலத்தையும் எடுத்துச் சொல்லி லெட்சுமணனை சாந்தப்படுத்தினான். பிறகு அன்னையிடம் விடைபெற்று சீதையைச் சந்திக்க அவள் இருப்பிடம் வந்தனர். இளையராணியாய் பதவி ஏற்க இருந்தவளிடம் நடந்தவற்றை விவரித்து, தான் வனம் செல்வதையும், அவள் அரண்மனையில் தங்கும்படியும் ராமன் சொன்னான்.

தர்மத்தின் தலைவனுக்கு அவள் தர்மம் போதித்தாள். ''கணவன் எங்கு இருக்கிறானோ அங்குதான் மனைவி வாழ வேண்டும். இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாமல் வாழ்வதுதானே மண வாழ்க்கை...'' என்றாள். ராமன் சிரித்துக் கொண்டே அவளது வார்த்தைகளை ஆமோதித்தான்.

லெட்சுமணன், சீதை உடன் வர ராமன் மறுபடி தசரதனையும், கைகேயியையும் பார்த்து ஆசி பெற்று விடைபெற கைகேயி இருப்பிடம் வந்தனர். தாய், தந்தையரை மூவரும் வலம் வந்து வணங்கி நின்றனர். தசரதனுக்கு துக்கம் தாளவில்லை. மிகவும் கஷ்டப்பட்டு தசரதன் பேசினான். ''என் கண்ணே! உன்னை கானகம் அனுப்ப நான் சம்மதிப்பேனா? என்னுடைய துரதிருஷ்டம் கைகேயியை இப்படிச் செய்யத் தூண்டி-



யுள்ளது. நீயும், சகல பரிவாரங்களோடும் குறிப்பிட்ட காலத்திற்கு சுகமாக வனத்தில் கழித்து விட்டு வா..''

கைகேயி சினந்து கூறினாள். ''உன் தந்தை பாசம் மேலிட்டு ஏதோ உளறுகிறார். வனவாசத்தை ராஜ சுகத்தோடு நீ கழிக்கக் கூடாது. ராஜபரிவாரங்கள் இன்றி உண்மையான வன வாழ்க்கை நடத்து...''

தசரதன் கண்ணீர் பெருக மறுபடி மயக்கமடைந்தான்.

ராமன் சொன்னான்...''தாயே! கலக்கம் வேண்டாம். இப்போதே நாங்கள் மரவுரி தரிக்கின்றோம். உண்மையான வனவாழ்க்கையை நியம நிஷ்டையோடு நடத்துகின்றோம்...'' என்று சொல்லி பெற்றோர்களை பயபக்தியாய் வணங்கினான்.

மரவுரி தரித்து மூவரும் வனம் வரை செல்லத் தயாராயிருந்த தேரில் ஏறினார்கள். ஊரெங்கும் செய்தி பரவி சோகமயத்தில் நகர வீதிகளில் மக்கள் குழுமியிருந்தனர். ரதம் ஊர்ந்து சென்றது. மனிதர்கள் மட்டுமல்லாமல் பிராணிகள்கூட கண்ணீர் சொரிந்து கதறி நின்ற காட்சி...ஓ...!

**கங்கைக் கரையில்...**

சுமந்திரனின் தேர் கங்கைக் கரைக்கு வந்து சேர்ந்தது. கங்கைக்கரை நிஷாதர்களுக்கு சொந்தமான பூமி. அவர்களின் தலைவன் குகன் சீதா ராமலெட்சுமணர்களை அன்புடன் எதிர் கொண்டு அழைத்தான். குகன் காட்டிய அன்பினால் ராமன் மகிழ்ந்து தனது நான்காவது சகோதரனாய் ஏற்றுக்கொண்டான்.

கங்கைக் கரையைத் தாண்டி வனவாசம் தொடர குகனிடம் விடை கேட்டான். தன்னுடன் தங்கியே பதினான்கு ஆண்டுகாலம் கழித்துவிடலாம் என்ற குகனை சமாதானப்படுத்திவிட்டு ஒரு பெரிய ஓடத்தில் கங்கையில் பயணப்பட்டனர். சுமந்திரன் தேரோடும், கண்ணீரோடும் அயோத்திக்குத் திரும்பினான். ஓடம் கங்கையைக் கடந்து மறுகரைக்கு வந்தது.

லெட்சுமணன் முன்னே வழி அமைத்துக் கொண்டே செல்ல சீதையைத் தொடர்ந்து ராமன் நடந்து கொண்டிருந்தான். ராஜகுமாரர்களும், சீதையும் ஒரு புதிய வாழ்க்கையை அனுபவித்தனர். ஆலமரத்தடிகளே அவர்களின் இரவுநேர வாசஸ்தலங்களாயின. பரத்வாஜ முனிவரைக் கண்டு ஏகாந்தவாசம் செய்ய தகுந்த இடம் பற்றி விசாரித்தனர்.

முனிவர் சித்திரகூட மலையைச் சிபாரிசு செய்ய, முனிவரின் ஆசிகளோடு விடைபெற்றனர். வனங்களின் வனப்பை களிப்போடு ரசித்து, சித்திரகூடமலை வந்து சேர்ந்தனர். இயற்கை அழகு கொஞ்சும் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே பர்ணசாலை ஒன்று லெட்சுமணனால் அமைக்கப்பட்டது. அவனது வித்தக விரல்களை ராமன் முத்தமிட்டு மகிழ்ந்தான்.

## தசரதன் மறைவு

சுமந்திரன் தனிமையில் தேர் செலுத்தி அயோத்தி வந்தடைந்தான். வழிநெடுக ராமனைப் பற்றி மக்கள் விபரம் கேட்டு துளைத்தனர். கங்கையைத் தாண்டி அவர்கள் சென்றதை பலரிடமும் சொல்லிச் சொல்லி அவன் களைப்படைந்தான்.



அரண்மனை வந்து சேர்ந்து கௌசல்யா தேவி-யிடமும், தசரதனிடமும் ராமனின் அன்பு விசாரிப்புகளையும் அவரவர்களுக்கு ராமன் தெரிவித்த செய்திகளையும் சொன்னான். ஊரும், அரண்மனையும் ஒளியிழந்து, களை-யிழந்து இருந்தது. தசரதனுக்கு நினைவு வருவதும், தப்புவதுமாய் இருந்தது. நினைவும், உணர்வும் துல்லிய-மாக இருக்கும் பொழுது, ராமனை நினைத்துக் கொண்டு அழுதான். அன்னை கௌசல்யா சோக வடிவாக மௌன-மாயிருந்தாள்.

தள்ளாத வயதில் தாங்கமுடியாத துயரத்திலிருந்த தசரதன் தன் இளமைக் காலத்தில் தான் பெற்ற ஒரு சாபத்தை நினைவு கொண்டு கௌசல்யாளிடம் விவரித்தான்.

"சரயு நதிக்கரையில் ஒரு நாள் இரவு. மழை பெய்து ஓய்ந்த வேளை அது. ஒலியைக் கேட்டே குறியைத்தாக்கும் என் பாண வித்தையை பரிசோதித்துப் பார்க்கும் சந்தர்ப்பம், எனக்குக் கிடைத்தது.

அருகிலுள்ள ஓர் ஆற்றில் யானை நீர் அருந்தும் ஒலி கேட்க, நான் ஒரு பாணத்தைத் தொடுத்தேன். யானை பிளிறலுக்குப் பதில் ஒரு மனிதனின் அபயக்குரல் கேட்டு குறியைத் தேடி ஓடினேன். அங்கே ஆற்றின் கரையில் குற்றுயிரும், குறையுயிருமாக ஒரு வேத பண்டித பாலன் மார்பில் அம்பொடு தரையில் கிடந்தான். கண் பார்வை இழந்து தாகத்தோடு உட்கார்ந்திருக்கும் தன் வயதான பெற்றோருக்காக அவன் தண்ணீர் எடுக்க வந்ததையும் உடன் அருகில் இருக்கும் தன் பெற்றோரை சந்தித்து தண்ணீர் கொடுத்தவுடன் நடந்த விவரங்-களையும், மன்னிப்பையும் தெரிவிக்கவும் கோரவும் சொல்லி மரணமடைந்தான்.

அந்த வயதான தம்பதியரைச் சந்தித்து அறியாமல் நடந்து விட்ட அவர்களது புதல்வனின் மரணத்தை தெரிவிக்க, அவர்கள் சினந்து, அவர்களைப் போலவே வயதான காலத்தில் நானும் புத்திர சோகத்தால் மரண-மடையச் சபித்தனர்...'' என்று அழுதான் தசரதன்.

கௌசல்யாதேவி சலனமின்றி மௌனியாய் அமர்ந்-திருந்தாள். தசரதன் தன் இளமைக்கால சம்பவத்தைச் சொல்லிமுடித்த சிறிது நேரத்தில் மரணமடைந்திருந்-தான். மறுநாள் காலையில்தான் அவனது மரணம் மனைவிகளுக்குத் தெரிந்தது. கோசலை சக்ரவர்த்தியை இழந்து தவித்தது.

## பரதன் வந்தான்

ராமனின் பிரிவால்வாடியிருந்த அயோத்திமாநகரம் தற்போது தசரதச் சக்ரவர்த்தியையும் இழந்து அந்-தகாரத்தில் மூழ்கியது. குடிமகன்களும், ராஜஊழியர்களும் வசிஷ்டரை யோசனைகேட்டு நிற்க, வசிஷ்டர் பரதனையும், சத்ருகனனையும் கேகய நாட்டிலிருந்து அழைத்து வர சில ராஜாங்க ஊழியர்களைப் பணித்தார். நடந்து முடிந்து விட்ட கெட்ட செய்திகளை பரதனிடம் அங்கு தெரிவிக்கக்-கூடாது என்பதும் அவரது கட்டளையாய் இருந்தது.

அண்ணனின் வனவாசம், தந்தையின் மறைவு போன்ற விஷயங்கள் தெரியாமல் பரதனும், சத்ருகனனும் தேரிலேறி அயோத்திக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். எட்டாம் நாள் அயோத்தியின் எல்லைக்கு வந்து சேர்ந்த-னர். எங்கும் அமங்கலமான சூழ்நிலைகள். களையிழந்து, ஒளியிழந்து, தெருவெல்லாம் வெறிச்சோடியிருந்தது. பரதன் துக்கம் கொண்டான். என்னவோ துர்சம்பவம் நடந்திருப்பதை மட்டும் உணர்ந்து கொண்டான்.



அரண்மனை வந்தடைந்து அன்னைகைகேயியைப் பார்த்து, ராமனின் வனவாசம், லெட்சுமணன், சீதையின் வனவாசப் பங்கேற்பு, தசரத மரணம் அனைத்தையும் அறிந்து கொண்டான். துடித்துப்போன பரதன், நடந்து முடிந்து விட்ட அனைத்துக் கெட்ட நிகழ்ச்சிகளுக்கும் தன் அன்னை கைகேயிதான் காரணம் என்பதை உணர்ந்து மனம் நொந்தான். கைகேயியைப் பலவாருக நிந்தித்துப் பேசினன்.

## அண்ணன் வழியில் பரதன்

கைகேயியின் பேராசையால் அனைவருடைய வெறுப்பையும் தாங்க வேண்டிய சூழ்நிலைக்கு பரதன் ஆளாகிவிட்டான். தசரதச் சக்ரவர்த்திக்கு ஈமச்கிரியைகள் பரதனல் நடத்தப்பட்டன.

வசிஷ்டர் போன்ற பெரியவர்கள் பரதனை நாடாள வற்புறுத்தினர். பரதன் உறுதியாக மறுத்தான்.

''முறையாக பண்பாட்டுடன் வளர்ந்தவன் இந்த பரதன். என் அண்ணன் ராமன் அமரவேண்டிய இந்த, அரசுக் கட்டிலை சத்திய விரோதமாக, ராஜதர்மத்திற்கு எதிராக நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஆரண்யத்தில் தவ வாழ்க்கை வாழும் அவரை அழைத்து அரியணை அமர்த்துவேன். தர்மம் காக்கும் தவசீலர்களே! நீங்க-ளெல்லாம் என் முடிவை ஏற்று என்னுடன் ஒத்துழைத்து ராம பட்டாபிஷேகத்திற்கு வழி செய்யுங்கள்'' என்று ராஜசபையில் முழங்கினன் பரதன்.

''இவனல்லவோ ராமனின் இளவல்!'' என்று அனைவரும் பரதனின் தூய உள்ளத்தைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

## பரதனும் குகனும்

பரதன் தன் பெரும் பரிவாரங்களுடன் கங்கைக் கரையில் முகாமிட்டான். அக்கரையில் இருந்த குகன் பரதனின் முகாமை அறிந்து எதிர்கொண்டு அழைக்க கங்கையின் இக்கரைக்கு வந்து சேர்ந்தான். பரதனுக்கு கனி வகைகள் சம்பிரதாய முறையில் அளித்துவிட்டு, பரதனைப்பார்த்து குகன் சொன்னான்:

''ராமனைத் தேடும் உங்கள் நல்ல மனதைப் பாராட்டுகிறேன். ஆனால் அந்த முயற்சிக்கு இத்தனை பரிவாரங்கள் அவசியம்தானா?''

இந்தக் கேள்வியை சற்றும் எதிர்பாராத பரதன் கைகேயியினால் தனக்கு ஏற்பட்டிருக்கிற அபகீர்த்தியை நினைத்து வருந்தினான். பரதனின் மாசற்ற மனதைப் புரிந்துகொண்ட குகன் மகிழ்ந்து, பரத்வாஜ முனிவரின் ஆசிரமத்திற்கு வழி காண்பித்தான்.

அந்த முனிவரின் ஆசிரமத்திற்கு சற்று முன்னாலேயே தன் சேனையை நிறுத்திமுட்டு, மரவுரிதரித்துக் கொண்டு வசிஷ்டருடன் சென்று அவரை வணங்கி நின்றான் பரதன். பரதனின் தூய அன்பைத் தெரிந்து கொண்டு முனிவர் மகிழ்ந்தார். அன்று இரவு பரதனுக்கும் அவனது பெரிய குழுவிற்கும் தம் தவ வலிமையால் அருமையான விருந்தை அளித்தார்.

ராமன் வாசம் செய்யும் சித்திரகூட மலையைப் பற்றி விளக்கி விட்டு, ஆசிகள் கூறி பரதனையும் அவனது பரிவாரங்களையும் அனுப்பி வைத்தார்.

## ராமனின் ஆசிரமம்

மந்தாகினி ஆற்றைத் தாண்டியவுடன் ராமனின் பர்ணசாலையைத் தொலைவிலிருந்தே பரதன் பார்த்து-



விட்டான். தன் பெரும் சேனையைத் தள்ளி நிறுத்தி-விட்டு வசிஷ்டர், சுமந்திரனுடன் பரதன் ராமனின் பர்ணசாலை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

பர்ணசாலையை ஒட்டிய ஒரு மலைச்சரிவில் சீதையும், ராமலெட்சுமணர்களும் அமர்ந்து உரையாடிக் கொண்டி-ருந்தனர்.

நிம்மதியான அந்தச் சூழ்நிலையில் ஏதோ மாறுதல் ஏற்படுவதை உணர்ந்த லெட்சுமணன் எழுந்து ஒரு மரத்தின் உச்சியில் ஏறி நோக்கினான்.

பரதனின் சேனை கண்ணில் பட்டவுடன்... ''அண்ணா! ஒரு சதுரங்க சேனை மந்தாகினி ஆற்றின் கரையில் முகாமிட்டுள்ளது. முன்வரிசையில் நிற்கும் ஒரு தேரில் திருவாத்திக் கொடி பறக்கிறது. கைகேயியின் புதல்வன் பரதன்தான் வந்திருக்கவேண்டும். ராஜ்யத்-தைப் பறித்ததும் அல்லாமல் நம் உயிரையும் பறிக்க வருகிறான் பரதன். அவனை எதிர்த்து வதம் செய்யப் போகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே மரத்தின் உச்சியிலிருந்து இறங்கி வந்தான்.

## அபூர்வ சந்திப்பு

''தம்பி லெட்சுமணா! மதியை இழந்து பேசுகிறாயா? பரதனைக் கொன்றுவிட்டு நமக்கெதற்கு முடி மகுடம்? பரதனை நீ அறிய மாட்டாயா? உன்னைப்போல் உத்தம குணம் கொண்டவனல்லவா அவன். உணர்ச்சி உந்தலினால் அவசரப்பட்டு நீ ஏதாவது செய்து விடாதே'' என்று சற்றுக் கோபமாகவும், அதே சமயத்தில் பாச உணர்வோடும் ராமன் கூறினான்.

சிறிது நேரத்திற்குப்பின் பரதன் ராமனது இருப்-பிடம் வந்து சேர்ந்து ராமனைக் கண்டவுடன் உணர்ச்சி

மேலிட 'அண்ணு'! என்றுகதறி ராமனின்காலேகண்ணீரால் நனேத்தான். பரதனே ஒருவாருக ராமன் சமாதானம் செய்தான்.

தசரதனின் மறைவு அறிந்து சீதா, ராம லெட்சு-மணர்கள் மிகுந்த துக்கம் கொண்டு, பிறகு ஆற்றங்-கரையில் கிரியைகளே ராமன் தந்தைக்கு முடித்தான்.

பர்ணசாலேயில் வசிஷ்டரும், நான்கு தசரத குமாரர்களும், சீதையும், மூன்று பட்ட மகிஷிகளும் மற்ற பெரியவர்களும் ஒன்ருக அமர்ந்திருந்தனர்.

ராமன் பேசினுன். ''பரதா! ராஜ்யபாரம் சுமக்க-வேண்டிய நீ மரவுரி தரித்து வந்திருக்கிருயே?'' என்ருன்.

பரதன் சொன்ஞன் 'அண்ணு! அயோத்தி உன்னுடையது. நீ தான் அந்த மக்களின் ஒரே நம்பிக்கை. எனது தாயினுல் இந்த விபரீதம் வந்தது. உனக்குப்பதில் நான் பதினுன்கு ஆண்டு வன வாழ்க்கை மேற்கொள்வேன்.

''தம்பி! உன் தூய உள்ளம் கண்டு மகிழ்ச்சி. என் மீதுள்ள பாசத்தால் தர்மத்தை நீ மறந்து விட்டாய். தந்தையின் கட்டளையை மீறுவது எந்தவகையில் நியாயம்? அதுவும் அவர் தற்போது இறந்து விட்ட நிலேயில் அவர் விதித்த கட்டளேயை நான் எப்படி மீறலாம்?...'' என்றும், தர்மநீதி சாஸ்திரங்களே மேற்கோள் காட்டியும் தன் நிலேயை உறுதிப்படுத்தினுன் ராமன்.

பலருடைய தீர்ப்பின் பேரில் ஒரு முடிவு பிறந்தது. பரதனின் உறுதியான வேண்டுதலின் பேரில் ராமனின் பாத தூளிகையைப் பெற்று, அதை அரியாசனம் ஏற்றி ராமனுக்குப் பதில் பரதன் பதினுன்கு ஆண்டுகாலம் வேறு நகரில் இருந்து கொண்டு ராஜ்யபரிபாலனம் செய்வது என்றும், மேற்சொன்ன காலம் முடிந்தவுடன் ராமன் நாடாளவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.



பரதனும் அவனது பரிவாரமும் கண்ணீர் மல்க ராமனிடம் விடைபெற்றனர். பரதன் ராமனின் மிதியடிகளே தன் தலேயில் சுமந்து கொண்டு அயோத்தி மாநகர் வந்து ராஜசபையை கூட்டினுன்,

''நந்தி நகரில் இருந்து கொண்டு ராமனுக்குப் பதிலாக ராஜ்யபரிபாலனம் செய்ய உறுதி கூறுகிறேன். உங்களுடைய ஒத்துழைப்பும், ராமனின் ஆசிகளும் எனக்கு கிடைக்கட்டும்...'' என்று சொல்லி ராமனின் மிதி அடிகளே அரியாசனம் ஏற்றி வணங்கினுன்.

அனேவரும் மகிழ்ந்தனர். ஒளியிழந்து கிடந்த கோசலதேசம் ஒளியினேப் பெற்றது.

## ஒரு சாப விமோசனம்

சித்திரக்கூடப் பகுதியில் ராவணன் தம்பியான கரனின் அரக்கத்தனமான ஆர்ப்பாட்டம் தொடர்ந்து இருந்தது. அவனது தொல்லேகளால் ரிஷிகள் பலரும் வேறு இடம் சென்றனர். ரிஷிகள் பலரும் வேறு இடம் சென்றுவிட்டபடியால் தாங்களும் சித்திர கூடத்தைவிட்டுப் போய் தண்டகாரண்யத்தில் ஒரு இடம் பார்த்து தங்க சீதா ராமலெட்சுமணர்கள் முடிவு செய்தனர். மூவரும் அடர்த்தியான தண்டகாரண்யப் பகுதிக்குள் பிரவேசித்து அங்குள்ள அழகான இயற்கைச் சூழலில் மனதைப் பறி கொடுத்தனர்.

திடீரென ஒரு பெரிய கரிய உருவம் எதிர்ப்பட்டது. அவன்தான் விராதன். சீதையை ஒரு பொம்மையைத் தூக்குவதுபோல் தூக்கிக்கொண்டு ராமலெட்சுமணர்களேப் பார்த்து ''நீங்களெல்லாம் யார்?'' என்று கேலியாக விசாரித்தான். தசரத குமாரர்கள் சினந்து அம்புகளால் அவனே துளேத்தனர். பிரமனின் வர அருளால் அம்பு

போன்ற ஆயுதங்களால் அவனைக் காயப்படுத்த முடிய-வில்லை. அதைத் தெரிந்து கொண்டு தங்கள் கைகளாலே யே அரக்கனைத் தாக்கி பயங்கரமாய் காயப்படுத்தினர்.

அரைகுறை நினைவோடு ஆற்றல் இழந்து போன விராதனின் வேண்டுகோளின்படி ராம லெட்சுமணர்கள் அவனை ஒரு குழி தோண்டி அதில் தள்ளினர். தான் ஒரு கந்தர்வன் என்றும், சாபத்தால் இப்படி கொடூர உருவம் பெற்றதையும், ராமனின் திருக்கை தன் மேல்பட்டு சாப விமோசனம் பெறுவதற்காகவே இதுகாறும் காத்திருந்த-தாகவும் சொல்லி குழியில் படுத்திருந்த நிலையில் உயிர் விட்டான்.

விராதனின் மறைவு கேட்டு ரிஷிகள் மகிழ்ந்தனர். தசரத குமாரர்களையும் சீதையையும் ஆசீர்வதித்தனர்.

## அகத்தியர்

தண்டகாரண்ய ரிஷிகளுக்கு ஒரு காப்பாக ராமன் வாழ்ந்து வந்தான். பத்து வருடங்கள் ஒருவாருக வன வாழ்க்கையில் கழிந்திருந்தது. தவச்சீலர் அகத்திய நாதரைச் சந்தித்து ஆசிபெற எண்ணினுன் ராமன்.

'உமா-மகேசுவரன் திருக்கல்யாணத்தை பார்க்க வந்த கட்டுக்கடங்காத கூட்டத்தால் பூமி சமநிலை இழந்து போக அகத்திய குறுமுனியை மகேசுவரன் அழைத்து தெற்கு திசை சென்று பூமியை சமப்படுத்த ஆணை-யிட்டான். அதன்படியே அகத்தியர் தெற்கே சென்று ஏகாந்தமாய் நிற்க பூமி ஸ்திரப்பட்டது. திருக்கல்யாணத்-தை அங்கிருந்தே அகத்தியர் தனியாக பார்த்து ரசித்தார்.

விந்திய மலையின் வளர்ச்சியை தடுத்து பூமியை காத்தவரும் அவரே. வாதாபி, இவ்வலன் என்ற அரக்கர்-



களின் அட்டகாசத்தை ஒடுக்கியவர் அவரே. அந்த மகாமுனிவரைச் சந்தித்து சீதா, ராம லெட்சுமணர்கள் ஆசி பெற்று மகிழ்ந்தனர். அகத்தியர் ஆலோசனையின் பேரில் பஞ்சவடிக்கு இடம் மாற ஏற்பாடு செய்து கிளம்பினர்.

## ஜடாயுவின் அறிமுகம்

பஞ்சவடிக்குச் செல்லும் வழியில் ஒரு பெரிய கழுகை அந்த மூவரும் கண்டனர். கருடபகவானின் தம்பியான அருணனின் இரண்டாவது மகனும் சம்பாதியின் தம்பியு-மான ஜடாயு, தான் தசரதனின் நண்பர் என்று தெரிவித்து ராமனிடம் அறிமுகம் செய்து கொண்டார். தசரத மரணம் அறிந்து மனவேதனை அடைந்தார் ஜடாயு.

ராமன் வனத்தில் இருக்கும் காலம்வரை தசரதனின் ஸ்தானத்தில் இருந்து உதவுவதாக வாக்களித்தார்.

பிறகு பஞ்சவடிக்கு ஆகாய மார்க்கத்தில் பறந்து கொண்டே வழிகாட்டினுர் ஜடாயு.

## சூர்ப்பணகையும், கரனும்

பஞ்சவடியின் அழகிய சூழ்நிலைக்கு எற்ப அழகான ஒரு பர்ணசாலையை லெட்சுமணன் அமைத்தான். தவமும் நித்தியகர்மாக்களையும் செவ்வனே செய்து வந்தனர். அது மார்கழி மாதம். கோதாவரி நதியில் குளித்துவிட்டு சீதா, ராம, லெட்சுமணர்கள் பேசிக் கொண்டே வந்தனர். அவர் களது பேச்சு பரதனைப் பற்றியும், அயோத்திபுரி நண்பர்-களைப்பற்றியும் இருந்தது.

பர்ணசாலைக்கு வந்து சேர்ந்த சிறிது நேரத்தில், ராவணனின் சகோதரியான சூர்ப்பணகையானவள்

ராமனின் முன் தோன்றினாள். ராமனின் அழகில் மயங்கி காமத்தால் பீடிக்கப்பட்டு ராமனைப் பற்றி அவனிடமே விசாரித்தாள்.

ராமன் தன்னைப்பற்றியும், தன் ஆரண்ய வாழ்க்கையைப் பற்றியும் சொன்னான். இலங்காபுரியின் வேந்தன் ராவணனின் சகோதரி என்பதையு , கும்பகர்ணன், விபீஷணன் மட்டுமல்ல, இந்தக்காட்டை ஆளும் கரனும், தூஷணனும் தன் உடன்பிறப்புக்கள் என்று தன்னைப்பற்றி அறிமுகப்படுத்திக் கொண்டாள் சூர்ப்பணகை.

பின் சீதையைப் பார்த்து... ''இந்த மானிடப் பூச்சியை மறந்து விட்டு என்னை மணப்பாய். இந்தக் காட்டில் நாம் எப்படி வேண்டுமானாலும் சந்தோஷமாக வாழலாம்...'' என்றாள்.

ராமன் சிரித்துக்கொண்டே... ''எனக்குச் சமமான வீரன் லெட்சுமணன் இருக்க என் மீது மோகம் ஏன்? என்று விளையாட்டாகச் சொல்ல, அவள் லெட்சுமணனை நெருங்கி கொஞ்ச ஆரம்பித்தாள். லெட்சுமணன் கோபம் கொண்டு அவளைத் திட்டி அனுப்ப... தோல்வி தாங்காமல் சீதையின் மீது கொடூரமாய்ப் பாயவந்தாள் சூர்ப்பணகை. அதுவரை பொறுமை காட்டிய லெட்சுமணன், தன் கத்தியை எடுத்து அவளது மூக்கை அறுத்து எச்சரித்து அனுப்பி விட்டான்.

கடுமையான ரத்தப்பெருக்குடனும், அழுகுரலுடனும் தன் சகோதரன் கரனை வந்து சந்தித்தாள் சூர்ப்பணகை. அவளது நிலையைக் கண்டு விபரம் தெரிந்து கொண்ட கரன் மிகக் கோபத்துடன் தனது சேனைத் தலைவர்களை அழைத்து உத்தரவிட்டான். அவனது கட்டளையை ஏற்று



14 சேனைத் தலைவர்கள் ராமன் இருக்கும் இடம் வந்து அவனுடன் மோத, அந்த 14 பேரும் மாண்டனர்.

செய்தியை அறிந்த கரன் அவமானம் தாங்காமல், தானும், தூஷணனும், திரிசிரசும் பல்லாயிரக்கணக்கான அரக்க சேனையோடு ராமனை நெருங்க..., லெட்சுமணனைப் பார்த்து ராமன் சொன்னான். ''சீதையை அழைத்துக் கொண்டு மலைக்குகையில் பத்திரமாய் இரு. நான் இவர்களைச் சந்தித்துக் கொள்கிறேன்,'' என்று கவசத்தை மாட்டிக்கொண்டு சிங்கம்பே ல் தனியாக அரக்க சேனையை எதிர்த்தான்.

கரனின் அரக்க சேனை விளைவித்த பெரும் ஆரவாரத்தால் வனப் பிரதேசத்துப் பிராணிகள் அனைத்தும் பயந்து ஓடின. யுத்தம் ஆரம்பித்தது. பலவிதமான அரக்க யுக்திகளும் வீரியமாயின. ராமனின் பாணங்கள் சரம் சரமாய் சென்று ஆயிரக்கணக்கான அரக்க சேனையையும் அழித்தொழித்தது. கடைசியில் கரன் மட்டும் மிஞ்சி நின்றான்.

கதாயுதத்துடன் கரன் ராமன் மேல் பாய, ராமன் இந்திரபாணத்தை விடுவிக்க முடிவில் கரனும் மாண்டான். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். ரிஷிகள் மகிழ்ச்சியால் ராமனைப் போற்றி ஆசி வழங்கினர்.

சீதையும், லெட்சுமணனும் ராமனின் திறத்தைக் கண்டு மகிழ்ந்து மெய் சிலிர்த்து நின்றார்கள்.

**இராவணன்**

பஞ்சவடியில் நடந்த யுத்தத்தில் தப்பித்து தலைமறைவாய் ஓடிய அகம்பனன் என்பவன் இலங்கைக்குச் சென்று ராவணனிடம் பஞ்சவடி யுத்தம் பற்றி புலம்பினான் தனி மனிதனாக எந்தச்சேனையின் உதவியுமின்றி அரக்க சேனையை ஒழித்த ராமனின் திறமையைப் பற்றியும்,

சீதையின் அழகைப் பற்றியும், லெட்சுமணன் சூர்ப்பணகைக்கு செய்த அங்கஹீனம் பற்றியும் 'ஓ' வென்று கதறிக் கொண்டு சொன்ஞன் அகம்பனன்.

மானிடன் வடிவம் தாங்கினுலும் ராமன் என்பவன் சக்தி வாய்ந்தவன். அவனே போர்க்களத்தில் சந்திப்பதை விட சூழ்ச்சி செய்து சீதையை தூக்கி வந்துவிடுவதுதான் சிறந்த வழி என்ருன். ராவணன் யோசனை செய்த பின் தன் ரதத்தில் ஏறி ஆகாய மார்க்கமாய் மாரீசன் இருக்கு மிடம் வந்தடைந்தான்,

மாரீசன் பலவாருக ராவணனுக்கு புத்திகூறி அவனை திருப்பி விட்டான், ஆனுலும் ராவணனை விதி சும்மா இருக்க விடவில்லை. ராவணன் சபைக்கு சூர்ப்பணகை கடுங்கோபத்தோடு வந்து சேர்ந்தாள்.

அரக்கர் குலம் ஒட்டு மொத்தமாக பஞ்சவடியில் அழிந்து நிற்க, உடன் பிறந்தவள் காதும், மூக்கும் அறுந்து நிற்க, ராவணன் சந்தோஷமாய் சிம்மாசனம் வீற்றிருப்பது தகுமா?'' என்று அழுகுரலோடு ஓல மிட்டாள்.

தனது எண்ணம் நிறைவேருது குறுக்கே நிற்கும் சீதையை எப்படியும் பழிதீர்த்து விடுவது என்ற நினைப்பில் ராவணனிடம் சீதையின் அழகை பற்றி பலவாருக விவரித்தாள். பத்து தலைகளும் காமத்தாலும், தாபத்தாலும் புடைத்துப்போயின. மறுபடி ராவணன் மாரீசனை நோக்கி ஓடி, அவன் உதவியைக் கேட்டு நின்ருன். உதவி மறுக்கப்பட்டால் உயிரை எடுத்து விடுவதாகவும் பயமுறுத்தினன்.

ராவணனின் வேண்டுகோள்படி, சீதையை மயக்க தான் பொன்மான் வேடம் எடுக்க மாரீசன் ஒப்புதல் தந்தான்.



ராமனின் ஆசிரமம் முன்பு பொன்மான் வேடம் கொண்ட மாரீசன் துள்ளிக் குதித்து விளையாடி, ராவணனின் நினைப்புப்படியே சீதையைக் கவர்ந்திழுத்தான். சீதைக்கு அந்த மான் மீது அபார ஆசை வந்து அதைப் பிடித்துத் தன்னிடம் தர வேண்டினுள் ராமனிடம்.

லெட்சுமணன் சீதையிடம் ''அது மானல்ல. மான் வடிவம் தாங்கும் மாரீசன்'' என்று உடனே சொன்ஞன்.

''தம்பி! அது மாரீசனுக இருந்தால் கொன்று விடுகிறேன். உண்மையான மானுய் இருந்தால் பிடித்து வந்து உன் அண்ணியிடம் அளிக்கிறேன்...'' என்று சொல்லிக்கொண்டே அம்புகளும், வில்லும் எடுத்துக் கொண்டு புறப்பட்டான் ராமன்.

பொன்மான் ராமனைக் கண்டதும் நிறைய தூரம் ஓடி ராமனை பின் தொடர்ந்து வரச் செய்தது. ராமனுல் அதை உயிருடன் பிடிக்க முடியாத நிலைக்கு வந்ததும், அதன் தோலையாவது சீதைக்கு எடுத்துவர நினைத்து ஒரு பாணத்தை விட்டான்.

பாணத்தால் தாக்கப்பட்டதும் பொன்மான் உருவம் மறைந்து தன் கொடூரமான சுயரூபம் பெற்று மாரீசன் விழுந்து சாய்ந்தான். ஏற்கனவே முடிவு செய்திருந்தபடி மாரீசன் ''ஏ,சீதே-''ஏ, லெட்சுமணு!'' என்று ராமனின் குரலில் கத்திவிட்டு இறந்துபோனுன்.

ராமன் ஏமாற்றத்துடன் பர்ணசாலை திரும்பலானுன். அதற்குள் ராமனின் குரலைக் கேட்டு கலக்கமுற்ற சீதை, ராமனைப்போய் பார்த்து வர லெட்சுமணனைப் பணித்தாள்.

[illegible]

லெட்சுமணன் ராமனின் பராக்கிரமத்தை கருதியும்,

சீதைக்கு பாதுகாப்பு தரும் நோக்கத்துடனும் சீதையின் வேண்டுதோளை புறக்கணித்தான். சீதை தன் அறி-யாமையால் லெட்சுமணன் மீது கடுஞ்சொற்களை வீசினுள்.

இப்படிக் கடுமையாக தன்னை ஒரு போதும் நிந்திக்காத சீதையின் நிலையைப் புரிந்து கொண்டு பர்ண-சாலை முன்பு தன் பாணத்தால் ஒரு மந்திரக்கோடு வரைந்து அதைத் தாண்டாமல் நலமாய் இருக்கச் சொல்லி லெட்மணன் ராமனைத் தேடி விரைந்தான்.

எதிர்பார்த்தபடி எல்லாம் நடப்பதை அறிந்து அதுவரை மறைவில் இருந்த ராவணன் ஒரு தவரிஷியின் வேடம் பூண்டு சீதையிடம் வந்து சேர்ந்தான். குல வழக்கப்படி சீதை அவனுக்கு கனி வகைகள் தந்து உபசரித்தாள். பொய்ரிஷி சீதையின் அழகை வர்ணிக்க ஆரம்பித்தான். எப்படியோ சீதையை லெட்சுமணன் வரைந்த கோட்டை தாண்ட வைத்து, பிறகு அவளைத் தூக்கிக் கொண்டு தயாராயிருந்த விமானத்தில் தாவி ஏறினுன் ராவணன். சீதை கதறி அழுதாள்.

விமானம் பறந்து கொண்டு இருந்தது. ஜானகியின் அழுகுரலைகேட்டு ஒரு மரஉச்சியில் இருந்த ஜடாயு உயரமாகப் பறந்து நிலைமையைப் புரிந்து கொண்டு ராவணனைத் தாக்கினுர். ஜடாயு தள்ளாத வயதில் ஆயுத பாணியாய் இருந்த ராவணனைத் தாக்கினுர். ராவணன் ஜடாயுவின் பல பாகங்களில் குத்தினுன், கடைசியில் இறக்கைகளை இழந்த நிலையில் ஜடாயு தரையில் விழுந்தார். ராவணன் மகிழ்ந்தான்.

தர்மம் அதர்மத்தால் கடத்தப்பட்டுக் கொண்டிருந்தது.



## அசோக வனவாசம்

ராவணன் சீதையைக் கடத்திக் கொண்டு லங்காபுரி வந்துசேர்ந்தான். வருகின்ற வழியில் யாரோ ஒரு உருவம் மலை உச்சியின் மீது நிற்பதைப் பார்த்து. சீதையானவள் தன் ஆபரணங்கள் சிலவற்றைக் கழட்டி தன் மேலாடை ஒன்றில் வைத்துக் கட்டி கீழே போட்டாள்.

கொடூரமான உருவம் கொண்ட அரக்கிகளை சீதையின் துணையாக அமர்த்தினுன் ராவணன். சீதையிடம் தன்னுடைய செல்வம், வீரம், தவவலிமை, இத்யாதிகளை எடுத்துச் சொல்லி தன்னை எற்றுக் கொள்ளச் சொன்னான் ராவணன்.

கண்களில் கண்ணீரோடு குனிந்த நிலையில் சில சமயம் ராவணனுக்கு இப்படி பதில் சொல்வாள்... ''என் ராமனுக்கு இவ்வுலகில் யாருமே ஈடு இணையில்லை. வலிமையோடு, பொறுமையும் கொண்ட சீலர் அவர். என் பிரிய நாதனின் பாணங்கள் உன்னைக் கூடிய சீக்கிரம் நசித்து விடும்...''

சீதையின் மனது துளிக்கூட மாருதது கண்டு ராவணன் கோபம் கொண்டு ''பன்னிரெண்டு மாதங்கள் கெடு தருகிறேன். அதற்குள் உன் முடிவை மாற்றிக் கொண்டு என்னை ஏற்றுக் கொள். என் பிரியமான பட்ட மகிஷியாக உன்னை பிரகடனப் படுத்துகிறேன்.'' என்று சொல்லி சீதையை அசோகவனம் என்ற அழகான ஓர் இடத்தில் பல அரக்கிகளின் துணையோடு சிறை வைத்தான்.

## ராமனின் புலம்பல்

லெட்சுமணன் தன்னைத்தேடி வருவதை தள்ளி-யிருந்தே பார்த்துவிட்ட ராமன் ஏதோ கொடுஞ்செயல்

நடந்து விட்டதை உணர்ந்து கொண்டு வருந்தினான். ராமலெட்சுமணர்கள் சந்தித்துக் கொண்டு கலக்கத்துடன் பர்ண சாலையை நோக்கி விரைந்து வந்தனர்.

சீதையைக் காணாது தவித்தனர். செடி கொடிகள் வாடியிருந்தன. ராமன் துக்க சாகரத்தில் மூழ்கி கதறி அழுதான். லெட்சுமணன் அவனைப் பலவாருக தேற்றினான். பஞ்சபூதங்களால் கட்டுண்டிருக்கும் பொழுது இந்த மாயப் பிரபஞ்சத்தில் பரப் பிரம்மனின் நிலையே இப்படியிருக்கிறது. மனிதர்களான நம்முடைய நிலை எப்படியிருக்கும்?

## ஜடாயு மரணம்

அனலிலிட்ட புழுபோல் சீதையைப் பிரிந்த ராமன் அழுதான், துடித்தான். சீதையைத் தேடி வெகுதூரம் வந்துவிட்ட ராமலெட்சுமணர்கள் ஒரு இடத்தில் ஒரு ரதம் நொறுக்கப் பட்டும், ரத்தச் சேறும், ஜானகியின் முத்துமணிகளும் சிதறிக் கிடக்கக் கண்டனர். சற்று தூரத்தில் ஜடாயு ரத்த வெள்ளத்தில் மூர்ச்சையுற்று கிடந்தார். ராமலெட்சுமணர்கள் அவரிடம் நின்று அவரது உடலைத் தடவிக் கொடுத்தனர். ஜடாயு கண் விழித்துப்பார்த்து சன்னமான குரலில் சீதையை ராவணன் கடத்திச் சென்றதையும், தன்னுடைய போராட்டத்தையும் விவரித்து விட்டு உயிர் துறந்தார்.

ராம, லெட்சுமணர்கள் கண் கலங்கி நின்றனர். தந்தை தசரதனுக்கு நடத்த முடியாமல் போன ஈமக்கிரியைகளை ஜடாயுவுக்கு இருவரும் நடத்தி முடித்தனர்.

## அனுமானின் அறிமுகம்

ராவணன் சீதையை தூக்கிச் சென்றதை ஜடாயு மூலம் அறிந்தாலும், ராவணனது இருப்பிடம் தெரியாததால் அவர்களை தேடும் படலம் தொடர்ந்தது. ஓர் இடத்தில் தலையும் கால்களும் இல்லாமல், வயிறும், நெஞ்சுப்பகுதியில் ஒரு கண்ணும் கைகளை மட்டும் கொண்ட ஒரு கோர ராட்சதனைச் சந்தித்தனர். எதிர்ப்படும் அனைத்து ஜீவராசிகளும் அந்த அசுரனின் ஆகாரமாகிவிடும்.



ராம லெட்சுமணர்கள் அவனிடம் சிக்கிக் கொண்டனர். அவர்கள் போராடி அரக்கனது கைகளை வெட்டினர். ரத்தம் சொட்டச் சொட்ட இருந்த நிலையில் அரக்கன் பேசினான், ''என்பெயர் கபந்தன். ஒரு சாபத்தால் இப்படி உருவம் கொண்டேன். இந்திரனின் சாபவிமோசனப்படி ராம லெட்சுமணர் ளாகிய நீங்கள் என் கைகளை வெட்டிய நிலையில் எரித்தால் நான் சொர்க்கம் செல்வேன்''

அப்படியே தகனம் செய்யப் பட்டவுடன் கொடிய அரக்கன் அழகான வடிவம் பெற்று எழுந்து பேசினான். நீங்கள் சீதையை அடைவீர்கள். பம்பா தீரத்துக்குச் சென்று ரிஷிய மூக மலையில் வாழும் சுக்ரீவன் என்ற வானர அரசனின் நட்பைப் பெற்று உங்கள் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். சுக்ரீவனுக்கு அவனது அண்ணன் வாலியால் ஆபத்து உள்ளது. நீங்கள் அவனுக்கு உதவுங்கள்'' என்று கூறி அந்த உருவம் மறைந்தது.

ராமனும், லெட்சுமணனும் ரிஷியமூக வனம் அடைந்தனர். ராம லெட்சுமணர்கள் தன் பிரதேசத்தில் பிரவேசித்திருப்பதை அறிந்து அவர்கள் வாலியின் கையாட்களாயிருக்கலாமென யூகித்து, கலக்கமுற்றான் சுக்ரீவன். அனுமான் சுக்ரீவனின் பிரதான மந்திரியாவான். அவன் சொன்னான்... ''அவர்களைப் பார்த்தால் வாலியின் ஆட்களாகத் தெரியவில்லை. நான் அவர்களை அணுகிப் பேசி அவர்களைப் பற்றி அறிந்து வருகிறேன்'' என்றான்.

சுக்ரீவன் உத்திரவு பெற்று அனுமான் ராம, லெட்சுமணர்களைச் சந்தித்தான் முதல் சந்திப்பிலேயே தன் மனதை அவர்களிடம் பறிகொடுத்து விட்டான். தான் யார் என்பதை அறிமுகப்படுத்திக் கொண்டும், சுக்ரீவன் பற்றியும் அனுமான் சொன்னான். ராம, லெட்சுமணர்களைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொண்டான். பிறகு அனுமானின் நட்பு பக்தியாய் மலர்ந்தது. தன் தோளில் அவர்களைச் சுமந்து கொண்டு சுக்ரீவன் இடம் அழைத்து வந்து சேர்த்து அவர்களை அறிமுகப்படுத்தினான். ராமனுக்கு சீதையைத் தேடித்தர சுக்ரீவன் ஒப்புக்கொண்டான். வாலியை சுக்ரீவன் பொருட்டும், தர்மம் காக்கவும் வதம் செய்ய ராமன் பிரமாணம் செய்தான்.

அனுமான் மகிழ்ந்தான்.

## வாலி வதம்

சுக்ரீவன் வாலியின் பலத்தை உணர்ந்தவன். துந்துபி என்ற ஆயிரம் யானைகளின் பலத்தினை ஒரு சேரப் பெற்ற அசுரனை அலற அடித்து தூக்கியெறிந்தவன் வாலி. வாலியுடன் விதியின் காரணமாய் ஏற்பட்டு விட்ட பகைமையை நினைத்து நொந்து கொண்டிருந்தான் சுக்ரீவன்.

ஒருசமயம் கிஷ்கிந்தாபுரியின் எல்லையில் உள்ள ஒரு குகையில் மாயாவி என்ற அரக்கனோடு தனியாக யுத்தம் செய்ய வாலி நுழைந்துவிட, வாசலில் சுக்ரீவன் வாலியின் ஆணைப்படி நின்றான். பல நாட்கள் குகையில் போர் தொடர்ந்தது. சில நாட்கள் கழித்து, ரத்தம் பெருவாரியாக குகையிலிருந்து வெளிவர, வெளியில் காத்திருந்த சுக்ரீவன் வாலி மரணித்துப்போனான் எனக் கருதி, தனக்கும், கிஷ்கிந்தாபரிக்கும் யாதொரு சேதமும் வரக்கூடாது என்று நினைத்து ஒரு பெரிய பாறாங்கல்லை



எடுத்து குகை வாசலைமூடிவிட்டு கிஷ்கிந்தாபுரி திரும்பினான் பிறகு அவன் அரசனாக பதவி ஏற்றான்.

மாயாவியை ஒருவாறாகப் போரில் ஒழித்துக்கட்டி விட்டு குகையின் வாசலை எப்படியோ உடைத்தெறிந்து, வாலி வெற்றியோடு கிஷ்கிந்தாபுரி வந்து சுக்ரீவனின் பட்டாபிஷேகத்தை அறிந்து கோபமுற்றான். சுக்ரீவன் தன்னுடைய நிலையை எடுத்துச் சொன்ன போதிலும், நம்பாத வாலி சுக்ரீவனை அடித்துத் துரத்தினான். இப்படி விதி வசத்தால் வாலியின் பகைமையைப் பெற்றதை நினைத்துக் கொண்டிருந்த சுக்ரீவனுக்கு திடீரென ராமனின் பராக்கிரமத்தின் மீது சந்தேகம் எழுந்தது.

சுக்ரீவனின் சந்தேகத்தை எப்படியோ உணர்ந்து கொண்ட ராமன், கனத்த ஏழு மரங்களை ஒரே பாணத்தால் துளையிட்டு தன் வீரத்தைக் காட்டினான். சுக்ரீவன் மகிழ்ந்தான். பிறகு சுக்ரீவன் தீர்மானித்தபடி ராமனின் ஆதரவை நம்பி வாலியுடன் யுத்தம் செய்ய கிஷ்கிந்தாபுரி வந்தான்.

யுத்தம் ஆரம்பித்தது. பலசாலியான வாலி சுக்ரீவனை பலவாறாக தொந்தரவு செய்தான். நிலைமை படுமோசமாகும் முன்பு மறைந்திருந்து ராமன் வாலியின் மார்பை நோக்கி பாணத்தை விட மலையாய்ச் சரிந்தான் வாலி.

சுக்ரீவனிடம் சத்தியம் செய்து கொடுத்து விட்ட நிலையிலும், சுக்ரீவனின் மனைவியை மீட்க வேண்டிய நிலையிலும்தான் ராமன் வாலியைத் தொலைத்தான். தன் பிரியமான மகன் அங்கதனையும், தன் மனைவியான தாரையையும் சரிவரக் கவனித்து வர தன் தம்பியான

சுக்ரீவனிடம் கேட்டுக் கொண்டுவிட்டு வாலி உயிர் விட்டான்.

பிறகு வாலிக்கு கிரியைகள் நடந்தேறின. கிஷ்கிந்தாபுரிக்கு சுக்ரீவன் அரசனாகவும், அங்கதன் யுவராஜனாகவும் பதவி ஏற்றனர்.

## வானர சேனை

சுக்ரீவன் சுக போகங்களில் கிஷ்கிந்தாபுரியின் அந்தப்புரத்தில் திளைத்திருக்க, ராமனும், லெட்சுமணனும் நகர எல்லையில்ஒரு குகையினுள் வாழ்ந்தனர். மாரிக்காலம் வந்தது. எங்கும் வெள்ளம். ராமன் மனதில் ஏதோ இனம் புரியாத சோகம் குடி கொண்டது. சீதையின் பிரிவால் வாடினான்.

மாரிக்காலம் முடிவடைந்த நிலையில் ராமனின் ஆணைப்படி லெட்சுமணன் கிஷ்கிந்தாபுரிக்குச் சுக்ரீவனைச் சந்திக்க விரைந்தான். லெட்சுமணன் வருகைக்கு முன்னமேயே அனுமான் ராமகாரியம் பற்றி சுக்ரீவனிடம் அடிக்கடி நினைவுப்படுத்திக் கொண்டிருந்தான்.

சுக்ரீவனை லெட்சுமணன் சந்திக்க, அவன் சிறிது காலதாமதமானதற்கு மன்னிப்பைக் கோரி விட்டு, உடனே வானரசேனையை ஒன்று திரட்டி ராமனின் குகைக்கு வந்து சேர்ந்தான். ராமன் மகிழ்ந்து சுக்ரீவனைப் போற்றினான். தகுதிவாய்ந்த ஒரு தலைவனின் கீழ் ஒரு படையை நிறுவி ஒவ்வொரு திசைக்கும் அவர்களை ஏவி சீதையைத் தேடும் பணியை முடுக்கி விட்டான் சுக்ரீவன்.

சதபலி வடக்கேயும், வினதன் கிழக்கு நோக்கியும், சுஷேணன் மேற்கு திசைக்கும், ஆஞ்சநேயன், அங்கதன்,



தாரன் தெற்கு நோக்கிச் செல்லவும் சுக்ரீவன் ஆணையிட்டான்.

அனுமான் தெற்குதிசை நோக்கி பயணம் செய்ய ஆயத்தமாகி விட்டு ராமனை ஆத்மார்த்தமாக வணங்கி நின்றான். ராமன் ஆசீர்வாதம் செய்து விட்டு, தன்னுடைய மோதிரத்தை அனுமானிடம் கொடுத்தான். தெற்குத்திசை சென்றவர்களைத் தவிர, மற்ற திசைகளுக்கு சென்ற சேனைகள் அனைத்தும் ஒரு மாத காலத்திற்குள் கிஷ்கிந்தைக்கு திரும்பி விட்டனர். அனுமானும், மற்றவர்களும் தெற்கே கடற்கரைக்கு வந்து சேர்ந்தனர்.

அந்தக் கடற்கரையில் அருகில் உள்ள ஒரு மலையின் மேல் ஜடாயுவின் அண்ணனை சம்பாதி என்னும்கழுகரசன் தன் வயோதிக காலத்தில் வாழ்ந்துவந்தான். வானர சேனையின் திடீர்பிரவேசம், அவர்களின் கவலை பற்றி தள்ளியிருந்து கவனித்துவிட்டு, தனக்கு ஆபத்து எதுவும் இல்லை என்பதை உணர்ந்து கீழேயிறங்கி வானர சேனைத் தலைவர்களிடம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான். ஜடாயுவின் மரணம்பற்றி அறிந்து கவலை கொண்டான்.

பிறகு தன் தூரதிருஷ்டியினால் சீதை இலங்காபுரியில் சிறை வைக்கப்பட்டிருப்பதை தெரிவித்தான். வானர சேனையும், குறிப்பாக அனுமானும், மகிழ்ந்தனர்.

ராமகாரியத்தில் உதவியதற்காக, ஏற்கனவே பெற்றிருந்த வரத்தின்படி புதுச் சிறகுகள் முளைக்கப்பெற்று சம்பாதி, புதுமைப் பொலிவோடு நிமிர்ந்து நின்றான். தம்பி ஜடாயுவிற்கு சில கிரியைகளை சமுத்திரத்தில் செய்தான்.

## அனுமான் இலங்கை பயணம்

சீதை இலங்காபுரியில் இருப்பதை சம்பாதி மூலம்

அறிந்து கொண்டாலும், தங்களில் யாராவது சீதையைப் பார்த்து விட்டுத்தான் ராமனுக்கு ஊர்ஜிதமான தகவல் தரவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. கடலைத்தாண்டி திரும்பிவரக் கூடிய ஆற்றல் மிக்கவன் அனுமான் ஒருவன் தான் என்பதை மூத்த வானர வீரனை ஜாம்பவான் தெரிவித்தான்.

அடக்கத்துடன் அமர்ந்திருந்த அனுமான் அந்தக் கருத்தை மிக்க சிரத்தையோடு ஏற்றுக் கொண்டான். வாயு ராஜன் ஆஞ்சனேயை மனதால் ஆலிங்கனம் செய்த-தால் பிறந்தவன் அனுமான். அறிவு ஜீவியான அனுமான் பராக்கிரமம் மிக்கவன்.

அனைவருடைய கருத்தின்படி பொறுப்பை ஏற்று, கடற்கரையின் அருகிலுள்ள மகேந்திர மலையின் மீது ஏறி விசுவரூபம் எடுத்து தன் இஷ்ட தெய்வத்தை வணங்கி நின்றான். கடலைத் தாண்டி பறக்க ஆரம்பிக்க வானரசேனை மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தது.

வழியில் பலவிதமான சோதனைகளை அனுமன் எதிர் கொண்டான். முடிவில் இலங்கையில் ஒரு மலையின்மீது கால்பதித்து மறுபடி தன் உருவத்தை சிறியதாக்கிக் கொண்டான்.

## கண்டான் சீதையை

இலங்கையில் இறங்கிய அனுமான் மிகச் சிறிதான ஒரு வடிவத்தை எடுத்துக் கொண்டு சீதையை தேட ஆரம்பித்தான். தேவலோகத்தை மிஞ்சுகின்ற அழகை இலங்கையில் எங்கும் கண்டான். ராஜவீதிகள், கடைகள், கோட்டை, கொத்தளங்கள், அரண்மனை, ராவணனின் அழகான அந்தப்புரம்... என்று எங்கும் தேடினான்.



விதவிதமான கலாச்சாரங்களைக் கொண்ட இலங்க-புரி அவனைக் கவர்ந்தது. இருந்தாலும் சீதையைக் காணாததால் கலக்கமுற்றான். கடைசியில் அசோக வனம் வந்து சேர்ந்தான். அந்த வனத்தின் நடுவே ஒரு மண்டபம். அந்த மண்டபத்தின் நடுவில் ஒரு பூங்-கொடி துவண்டு பூமியைப் பார்த்து உட்கார்ந்திருந்தாள்.

அவளது முகத்தில் அந்த சோக சூழ்நிலையிலும் ஒரு ஒளி இருந்தது. அவளைச் சுற்றி அரக்கிகள் பல-வாறக உட்கார்ந்திருந்தனர்.

அவள்தான் சீதை என்று அனுமானின் உள்மனம் சொல்லிற்று. யார் கண்ணிலும் படாமல் ஒரு மரக்-கிளையில் மறைந்து இருந்து கொண்டு நடப்பனவற்றை அனுமான் கவனித்தான். சிறிது நேரத்தில் பலமான ஆர்ப்பாட்டத்தோடு ராவணன் வந்து சேர்ந்தான்.

சீதையைப் பார்த்துச் சொன்னான். ''இன்னும் இரண்டு மாதக் காலக்கெடுதான் உள்ளது. உன் முடிவினை மாற்றி என்னை ஏற்றுச் சுகமாக வாழ். பார் புகழும் மன்னனாய் நான் இருக்க, ஒரு மரவுரி தரித்து வாழும் ஆண்டியை நினைத்து உன் வாலிபத்தையும் சந்தோஷத்தையும் இழந்து விடாதே...'' என்று கூறினான்.

குனிந்த தலை நிமிராது இருந்த அந்த ராம-பத்தினி ஒரு துரும்பைக் கிள்ளி முன்னால் போட்டு பேசினாள். ''உனக்கு அழியும் காலம் விரைந்து வந்து கொண்டிருக்கிறது. ஜனஸ்தானத்தில் உன் பதினாலாயிரம் அரக்க சேனையை தனிமையில் அழித்துக் கட்டிய வீரன் என் ராமன். தசரதமன்னனின் மூத்தமகன ஆண்டியா

வான்? ஒரு சத்திய விரதம் காக்க தற்காலிகமாய் மரவுரி தரித்துள்ளார். சீக்கிரம் ராமனைச் சந்தித்து மண்டியிட்டு உயிர்பிச்சை கேட்டு பெறு. இல்லையேல் அழிவைத் தேடிக் கொள்'' என்றாள் சீதை.

சினம் கொண்ட ராவணன் அரக்கிகளுக்கு கடுமை-யான உத்திரவை இட்டான். அவர்கள் சீதையை பல-வாறுக இகழ்ந்து பேசி துன்புறுத்தினர். இந்த நிகழ்ச்சிகளால் கோபம் கொண்டாலும், விவேகத்தால் மதியிழக்காமல் பொறுமை காட்டி அரக்கிகள் உறங்கிய பின் சீதைக்கு மட்டும் கேட்கும்படியாக ராமனது சரித்-திரத்தைக் சொன்னான் அனுமான். அதைக் கேட்டு மகிழ்ந்த சீதை முதன் முறையாக அனுமானைக் கண்டாள். அனுமான் தலை வணங்கி ராமன் கொடுத்து விட்ட கணையாழியை அவளிடம் கொடுத்து விட்டு அதுகாறும் நடந்த விஷயங்களை கோர்வையாகத் தெரிவித்தான் அனுமான்.

சீதை மகிழ்ந்தாள். தசரதன் தனக்கு வழங்கிய ஒரு சூடாமணியை அனுமானிடம் கொடுத்து ராமனிடம் அதைச்சேர்க்கச் சொன்னாள். மிக விரைவில் ராமன் இலங்கைக்கு படையெடுத்து தன்னை மீட்க ராமனிடம் தான் வேண்டுகோள் விடுத்ததாகச் சொல்லச் சொன்னாள் சீதை

## இலங்கை எரிந்தது

அனுமான் சிந்தித்தான். தான் சீதையை மட்டும் சந்தித்துவிட்டு அடிச்சுவடு தெரியாமல் திரும்பி யாது பலன் என்று யோசிக்கலானான். ராவணனுக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் தர நினைத்து, அசோக வனத்தைச் சுற்றியிருந்த நந்தவனத்தை அழித்தான். அரக்கிகள் அலறிக் கொண்டு ராவணனை சந்திக்கச் சென்றனர்.



வானரம் யாருடைய தூதன் என்று புரியாத நிலையில், தன்னுடைய சில வீரர்களை ஏவி அனுமானை பிடித்து வர உத்திரவிட்டான் ராவணன். மரங்களையும், பெரிய பெரிய இரும்புத் தூண்களையும் அனாயாசமாக எடுத்து அவர்களை மேலோகம் அனுப்பி வைத்தான் அனுமான். இதற்கிடையில் அடிக்கடி ராமனைப் பற்றியும், சுக்ரீவனைப் பற்றியும் புகழ்ந்து தான் யார் என்பதை தெளிவு படுத்திக் கொண்டிருந்தான்.

வந்திருப்பவன் ராமதூதன் என்பதை அறிந்து கொண்ட ராவணன், ஜம்புமாலி என்ற அசுரவீரனை ஏவி விட, அவனும் மரணித்துப் போனான். பிறகு ராவணனால் ஏவப்பட்ட சேனாதிபதிகள், ராவணனின் இளையமகன் அக்ஷன், பல மந்திரிகள் அனுமானின் பராக்கிரமத்தால் பரலோகம் சென்றனர். கடைசியில் மகாவீரனும், ராவணனின் அருமைப் புதல்வனுமான இந்திரஜித் வந்து சேர்ந்தான்.

யுத்தம் கடுமையாய் நடந்தது. பல அஸ்திரங்களும் பலனற்றுப் போக, கடைசியில் இந்திரஜித் பிரம்மாஸ்-திரத்தை பிரயோகிக்க அனுமான் கட்டுண்டான். மயங்கிய நிலையில் இருந்த அனுமானை வசைமாரி பொழிந்து கொண்டும், அடித்துக் கொண்டும் ஒரு பெருங் கூட்டம் ஒன்று அவனை இழுத்துக் கொண்டு தெருக்கள் வழியே ராவணனிடம் அழைத்துச் சென்றது. பிரம்மாஸ்திரம் ஒரு முகூர்த்த நேரம்தான் தன்னைக் கட்டுப்படுத்துமென்பதும், தான் ஒரு சிரஞ்சீவி என்பதும் அனுமானுக்குத் தெரியும்.

ராவணனைச் சந்திக்கும் வாய்ப்பைக் கருதி பலவித கொடுமைகளையும் தாங்கிக் கொண்டான். ராவணன் சபைக்கு கொண்டு வந்து நிறுத்தப் பட்டான் அனுமான்.

விசாரணை ஆரம்பித்தது. தான் யார் என்பதையும், லங்கா நகரமும், மன்னனும் ஒட்டு மொத்தமாக ராமனுக்கு தீங்கிழைத்தமைக்காக அழியப் போகின்றனர் என்பதையும் தைரியமாகத் தெரிவித்தான் அனுமான்,

ராவணன் கோபம் தாளாது அனுமானைக் கொலை செய்ய உத்தரவிட்டான். ''தூதன் ஒருவனை கொலை செய்வது ராஜ தர்ம விரோதம்'' என்று விபீஷணன் கூற அதனை ஏற்றுக் கொண்டு, அனுமானின் பிரதானமான வாலை தீ வைத்து பொசுக்கி அனுப்பிவிட உத்தரவிட்டான். வாலில் தீ வைத்து விட்ட நிலையில் அனுமான் தன் உருவத்தை சுருக்கியும், நீட்டியும் விளையாட்டுக் காண்பித்து..., ஒவ்வொரு மாளிகையிலும் ஏறி தீ வைத்துக் கொண்டே தாவிச் சென்றான். விஷயத்தை அறிந்த சீதை அக்னித் தேவனை வணங்க அனுமானுக்கு அக்னியின் சூடு தெரியாமல் போனது. அதே போல் சீதை இருக்கும் அசோக வனத்திலும் தீ பரவவில்லை.

இலங்கை பரவலாக எரிந்து கொண்டிருக்க, அனுமான் கடற்கரை வந்து அரிஷ்டமலை ஏறி ஒரே தாவில் பறந்து கடலைக் கடந்து தன் சக வானர சேனையை நெருங்கினான். எங்கும் மகிழ்ச்சி வெள்ளம்.

இலங்கையில் நடந்தனவற்றை அனுமான் ஒன்று விடாமல் விவரிக்க ஜாம்பவான், அங்கதன் மற்ற அனைவருமே மகிழ்ந்தனர். சுக்ரீவனிடம் விஷயத்தைஉடன் தெரிவிக்க எண்ணி, அனைவரும் களிநடனம் புரிந்து கொண்டே கிஷ்கிந்தாபுரியை வந்தடைந்தனர்.

## பறந்தது படை இலங்கை நோக்கி

ராமனிடம் அனுமான் பய பக்தியாகத் தான் சீதையைச் சந்தித்த விபரத்தை தெரிவித்தான், சீதை



கொடுத்துவிட்ட சூடாமணியை ராமனிடம் சமர்ப்பித்தான். ராமன் ஒரு புறம் மகிழ்ச்சியும், மறுபுறம் சீதையின் தனிச் சிறை வாழ்க்கை பற்றி துக்கமும் கொண்டான்.

உடன் போருக்குப் புறப்படுவதுதான் உத்தமம் என்று அனுமான் தெரிவித்தான்.

பல முக்கிய நபர்கள் ஒன்று கூடி யுத்த ஆலோசனை நடத்தினர்.

பறகு வெற்றிக்கு கட்டியம் கூறும் ஒரு மங்கள வேளையை நிர்ணயித்து, அந்த வேளையில் ராம லட்சுமணர்கள், சுக்ரீவன், ஜாம்பவான், அங்கதன், அனுமான், தாரன் ஆகியதலைவர்கள் கூடியபெரும் சேனையோடு கிளம்பி கடற்கரைக்கு வந்து சேர்ந்தனர்.

## இலங்கையில் ராஜசபை கூடியது

இலங்கையில் அனுமான் செய்துவிட்டு வந்த அட்டகாசத்தால் ராவணன் மனம் தளர்ந்து போயிருந்தான்.

ராவணன் ராஜசபையைக் கூட்டி யோசனை கேட்டான்.

அவனது தம்பி விபீஷணனைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் ராவணனைப் போற்றினர். ராவணன் குபேரனை, இந்திரனை, நாகராஜனை யுத்தத்தில் வெற்றி பெற்றதையும் மயன் ராவணனிடம், மண்டியிட்டு சிநேகம் செய்து கொண்டதையும் நினைவுப்படுத்திப் பேசி ராவணனை துதி பாடினர்.

கும்பகர்ணன் சீதையின் விஷயத்தில் ராவணன் நடந்து கொண்டவிதம் பற்றி அதிருப்தி தெரிவித்தாலும், தன்னுடைய உயிரை ராவணனுக்காக அர்ப்பணிப்பதாகச் சொன்னான்.

ராவணனின் புதல்வன் இந்திரஜித் தன் தந்தைக்கு முழுமையான ஆதரவைத் தந்தான்.

விபீஷணன் மட்டும் தர்மத்தையும் நியாயத்தையும் எடுத்துச் சொல்லி ராமனிடம் சீதையை திருப்பி அனுப்பச் சொல்லியும், ராமனிடம் தன்னுடையதவறுதலுக்காக மன்னிப்பைக் கோரும்படியும் பேசினுன்.

சபையில் விபீஷணனது பேச்சிற்கு எதிர்ப்புக் கிளம்பியது. ராவணனும் விபீஷணனைக் கடுமையாகத் திட்டினுன்.

இனிமேல் இலங்கையில் தான் இருப்பது சரியில்லை என்பதை உணர்ந்து, நான்கு நண்பர்களோடு ஆகாய மார்க்கமாகக் கிளம்பி ராமனிடம் சரணுகதி அடையச் சென்றுன் விபீஷணன்.

## விபீஷண சரணுகதி

சமுத்திரத்தைத் தாண்டிய விபீஷணன் ஆகாயத்தில் நின்றபடியே சுக்ரீவனிடம் பேசினுன். இலங்கை ராஜ சபையில் நடந்தனவற்றை தெரிவித்தான்.

தான் ராமனிடம் சரணடைய விரும்புகின்ற விஷயத்தைச் சொன்னுன்.

சுக்ரீவன் ராமனிடம் விபீஷணனின் வேண்டுகோளைத் தெரிவிக்க, ராமன் முறைப்படி பலரது அபிப்பிராயத்தைக் கேட்டான். பலவாருன அபிப்பிராயங்கள் தெரிவிக்கப் பட்டன. அனுமான் விபீஷணனுக்கு ஆதரவு தெரிவித் தான்.

முடிவில் ராமன் சொன்னுன். "ராவணனே சரணுகதி அடைய வந்தால் ஏற்றுக் கொள்வேன்" என்று. முடிவில் விபீஷணனது சரணுகதி ஏற்றுக் கொள்ளப்பட்டது.



## பாலம் கட்டப்பட்டது

ராமனின் படைகள் கடலில் பாலம் கட்ட முடிவு செய்தனர். ராமன் சமுத்திர ராஜனை ஆராதிக்க, அவனும் இயற்கை விதிகளை ஒட்டி உதவுவதாக வாக்களித்தான்.

மலை போன்ற பெரிய கற்களையும், பெரிய மரங்களையும் வைத்து பாலம் உருவானது. விசுவகர்மாவின் புதல்வன் நளன் பாலம் கட்ட பலவிதங்களில் உதவி செய் தான்.

எங்கிருந்தோ வந்த ஒரு சிறு அணிலும் தன் பங்குக்கு ஒரு சிறு கல்லை வாயில் கவ்விக்கொண்டு வந்து கடலில் போட்டு ராமனை வணங்கி நின்றது.

ராமன் பரவசம் அடைந்து அதைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு முதுகில் அன்பாக தடவிக் கொடுத்தான்.

பாலம் வழியாக படை ஆரவாரமாக சென்றது. ராமனை அனுமானும், லட்சுமணனை அங்கதனும் தோளில் சுமந்து அக்கரை வந்து சேர்ந்தனர்.

## யுத்தம் பிறந்தது

ராமனது வானர சேனையும், கரடிப்படைகளும் இலங் கைக் கரைக்கு வந்து சேர்ந்துவிட்டதை அறிந்து ராவணன் சினம் கொண்டான்.

யார் யார் எங்கிருந்து யுத்தம் நடத்த வேண்டு-மென்று பலருக்கும் ராவணன் கட்டளையிட்டான்.

ஒற்றர்களின் மூலம் ராமனது படைபலம் அறிந்தான்.

அந்தக் கடைசி நேரத்திலும், சில உண்மையான

நண்பர்கள் ராவணனிடம் சரணடைய யோசனை கூறினர். அவன் அந்த யோசனைகளை ஏற்க மறுத்தான்.

இலங்கைக் கோட்டையின் கிழக்கு வாயிலைக் காக்கும் பிரஹஸ்தனை நீலனும், மேற்கு வாயிலைக் காக்கும் மாயாவியான இந்திரஜித்தை அனுமானும், தெற்கு வாயிலைக் காக்கும் மகோதரனையும், பாரிசுவனையும் அங்கதன் எதிர்க்க ராமன் கட்டளையிட்டான்.

ராவணனை தானும், லட்சுமணனும் எதிர்க்கப் போவதை உணர்த்தினான்.

ராமனது சேனை சுவேலை மலையிலிருந்து இறங்கி ஒரு பெரிய வனத்திற்கு வந்து சேர்ந்தது.

ராமன் அங்கதனை அழைத்து ராவணனிடம் தூது போய் தான் பெருஞ்சேனையோடு வந்திருப்பதையும் விரும்பிச் சரணடைந்தால் ராவணனை விட்டுவிடுவதாயும், இல்லையேல் போரில் சந்தித்து அவன் உயிர் துறக்கத் தயாராக இருக்கவும் கூறப் பணித்தான்.

அங்கதனும் ராமனின் கட்டளையை ஏற்று ராவண சபை சென்று விபரத்தைக் கூறினான்.

ராவணன் கோபம் கொண்டு இரு அரக்கர்களை ஏவி அங்கதனை பிடிக்கச் சொன்னான். அங்கதனும் அவ்விரு அரக்கர்களையும் பிடித்துக் கொண்டு உயரே கிளம்பி பிறகு இருவரையும் உதறித்த அள்ளிவிட்டு, ராவணனது மாளிகை விமானத்தை உதைத்து தட்டிவிட்டு ராமனிடம் வந்து தகவலைச் சொன்னான்.

முறைப்படி யுத்தம் துவங்க உத்தரவிட்டான் ராமன்.



நிர்ணயிக்கப்பட்டபடி தாக்குதலை சீராக நடத்தினர் ராமனின் சேனைகள்.

பாருங்கற்கள், மரங்கள், கதாயுதம், கை, கால், பற்கள் என்று பல ஆயுதங்களும் அரக்கர்களுக்கு பயன் பட்டன.

ராமனது சேனைக்கும், ராவணனது சேனைக்கும் சமமான சேதம் ஏற்பட்டது.

அங்கதனின் அன்றையபோர் முறை அனைவரையும் கவர்ந்தது. அதேபோல் இந்திரஜித் பல சாகசங்களை செய்து ராமனது சேனையை கதறடித்தான். பிறகு மாயாஜாலங்களை செய்ய ஆரம்பித்தான்.

தான் எங்கிருக்கிறேன் என்று பிறருக்குத்தெரியாமல் ஆகாயத்தில் நின்று கொண்டு கடுமையாக ராமனது சேனையைத் தாக்கி அன்றைய யுத்தகள கதாநாயகனாகத் திகழ்ந்தான்.

பிறகு சரமாரியாக நாகபாணங்களை இந்திரஜித் தொடுக்க, ராமலட்சுமணர்கள் இருவரும் கட்டுண்டு யுத்த பூமியில் சாய்ந்தனர். வானர சேனை பயந்து போனது.

அதற்குள் இந்திரஜித், ராம லட்சுமணர்கள் நாக-பாணத்தால் இறந்துவிட்டதாக ராவணனிடம் சொல்ல கோட்டைக்குள் புகுந்தான். ராவணன் மகிழ்ந்து, சீதைக்கு தகவல் அனுப்பினான். அவள் வருந்தினாலும், செய்தியை நம்பத் தயாராயில்லை.

பலரும் துக்கப்பட்டு நிற்க, அப்பொழுது திடீரென பலத்த சத்தத்தோடு ஒரு கருடப்பறவை யுத்த பூமியின் மேல் பறந்தது.

அதனுடைய நிழல் ராம லட்சுமணர்கள் மேல் பட்டதும் அவர்கள் மூர்ச்சை தெளிந்தனர்.

கொடிய விஷம் கொண்ட பாம்புகளை தன் மாயா-ஜாலத்தால் பாணங்களாக்கி இந்திரஜித் உபயோகப்படுத்தியிருந்தான்.

தங்களின் யமனை கருடனின் பார்வை பட்டு பாணங்கள் மறைந்தன. பிறகு கருடன் ராமலட்சுமணர்களை தடவிக் கொடுக்க, புத்துணர்ச்சி பெற்று ராமலட்சுமணர்கள் எழுந்து நின்றனர்.

வானரசேனை கருடனை வணங்கி விட்டு முன்னைவிட மூர்க்கமாக ராவணனது கோட்டையைத் தாக்கினர்.

## ராவணன் கலக்கம்

"ராம லட்சுமணர்கள் இறந்து விட்டதாகச் சொன்னார்களே? அப்படியிருக்க என் இப்படி வானர-சேனை மகிழ்ச்சிக் குரல் எழுப்புகிறது."- இப்படி தனக்குத்தானே கேட்டுக் கொண்டு சிலரை கோட்டைக்கு வெளியே அனுப்பி நிலைமையை அறிந்துவர உத்தர-விட்டான் ராவணன்.

ராமலட்சுமணர்கள் உயிருடன் சிங்கங்களை போல் யுத்த களத்தில் உலாவுவதையும், வானரசேனைகள் மிக உற்சாகமாக இருப்பதையும் அறிந்து ராவணனிடம் அவர்கள் தகவல் தர ராவணன் கலக்கமுற்றான்.

தூம்ராக்ஷனை அழைத்து வானரர்களை வதம் செய்ய ஆணையிட்டான் ராவணன்.

பெரும்சேனை புடைசூழச் சென்ற தூம்ராக்ஷன் பயங்கரமாகப் போர் புரிந்தான். முடிவில் மாருதியினால் கொல்லப் பட்டான்.



அடுத்து வஜ்ரதம்ஷ்ட்ரனை அழைத்தான் ராவணன். அவன் அங்கதனால் யமலோகம் அனுப்பப்பட்டான்.

பிறகு அகம்பனைத் தேர்ந்தெடுத்தான் ராவணன். அவனும் மாருதியினால் மரணம் பெற்றான்.

பிறகு தன்னுடைய பிரதான சேனாதிபதியும், இலங்கைச் சேனையின் மூன்றில் ஒரு பங்குக்கு தலை-வனுமாய் இருந்த பிரகஸ்தனை அழைத்து போர் தொடுக்க ஏவினான்.

பலவிதமான போர் முறைகளைக் கையாண்டு வானர சேனைக்குப் பெருத்த சேதத்தை உண்டாக்கினான் பிரஹஸ்தன்.

முடிவில் அக்னிபுத்திரன் நீலன் பிரஹஸ்தனை வதைத்தான். ராமலட்சுமணர்கள் மகிழ்ந்தனர். ராவணனுக்கு செய்தி எட்டியது. கோபம் கொண்டு குதித்தெழுந்தான்.

பிறகு தானே தலைமை ஏற்று பெரும்படையுடன் களம்புகுந்தான் ராவணன்.

ராமன் முதல் தடவையாக ராவணனைப் பார்த்தான்.

ராவணன் பலவாறாக பெரும் வானரசேனையை வதம் செய்தான்.

நீலனை ஒரே அஸ்திரத்தால் நினைவிழக்கச் செய்தான் ரரவணன்.

அனுமான் சிறிது நேரம் ராவணனோடு முஷ்டி யுத்தம் செய்தான்.

லட்சுமணன் ராவணனோடு மோத அடிபட்டு மயக்கமுற்றான். பிறகு அனுமான் ராமனை தோளில் சுமந்து கொண்டு ராவணன் முன்பு நிற்க யுத்தம் ஆரம்பித்தது.

ராமனின் பராக்கிராமத்துக்கு முன் கிரீடம், தேர் ஆயுதங்கள் பறிபோயின.

நிராயுதபாணியாய் அடிபட்டு களத்தில் நின்ற ராவணனை நோக்கி ராமன் சொன்னான் "இன்றுபோய் நாளை வா" என்று.

அடியும், அவமானமும் பெற்று கோட்டைக்குள் புகுந்தான் ராவணன்.

மனம் நொந்து போயிருந்த ராவணன் கடைசி முயற்சியாய் கும்பகர்ணனை போரில் புகுத்த முடிவு செய்தான்.

திசை மாறிப்போன பொல்லாத வரத்தால் மாதக் கணக்கில் தூங்கும் கும்பகர்ணன் தூங்க ஆரம்பித்து ஒன்பது நாட்களே ஆகியிருந்தது.

இளந் தூக்கத்தில் அவனை எழுப்புவது சுலபம் என்று கருதி ஆட்களை அனுப்பி வைத்தான் ராவணன்.

யானைகளை கும்பகர்ணன் மேல் நடக்க விட்டும், பெருங்கூட்டம் முழுவதும் ஈட்டியால் குத்தியும், சங்க–நாதம் செய்தும் ஒரு வாரம் பிரயாசைப்பட்டு அவனை எழுப்பினர்.

எழுந்ததும் பசி தீர்த்துக் கொண்டு விபரம் அறிந்து ராவணனைச் சந்தித்தான். ராவணன் முன்பு வீர சபதம் எடுத்து உடம்பெல்லாம் ஆபரணம் ஜொலிக்க சூலாயுதம் ஏந்தி படையுடன் யுத்த களம் வந்தான்.



## கும்பகர்ணன் ஒழிந்தான்

கும்பகர்ணனது பெரிய உருவ அமைப்பைக் கண்டு வானரசேனை பயந்து சிதறி ஒடியது. அங்கதன் அவர்களை ஒழுங்கு படுத்தினான்.

அங்கதன், சுக்ரீவன், அனுமான், லெட்சுமணன், இப்படி பலராலும் தாக்கப்பட்டாலும் அவனை ஒன்றும் செய்ய முடிய வில்லை.

சுக்ரீவனை ஒரே அடியாக அடித்து அவன் மூர்ச்சை-யடைந்தவுடன் அவனைத் தூக்கிக் கொண்டு ராவணனிடம் சமர்ப்பிக்க கோட்டைக்குள் புகுந்தான், கும்பகர்ணன்.

சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்த சுக்ரீவன். கும்பகர்ணனின் காதையும். மூக்கையும் கடித்து விட்டு ஒரே தாவலில் களம் வந்து ராமன் அருசில் நின்றான்.

அவமானம் தாங்காத கும்பகர்ணன் மறுபடி களம் புகுந்து கோபாவேசத்தோடு எதிரிகளைத் தாக்கினான்.

முடிவில் ராமனின் பாணத்தால் முடமாகி தலை கொய்யப்பட்டு அழிந்தான்.

## இந்திரஜித் வீழ்ந்தான்

கும்பகர்ணனின் மறைவால் ராவணன் துடித்துப் போனான்.

தோவாந்தகன், திரிசிரஸ், மகோதரன், அதிகாயன் என்று எஞ்சியிருந்த கடைசி அரக்க வீரர்களை யுத்தத்-திற்கு ராவணன் அனுப்பி வைத்தான். அனைவரும் விரைவிலேயே யமலோகம் சென்றனர்.

பிறகு இந்திரஜித் இரண்டாம் முறையாக களம் புகுந்தான். அவனுடைய மாயா வேலைகளால் ராமனது சேனை கடுமையான தொந்தரவிற்குள்ளானது.

இதைப் பார்த்த இந்திரன் தனது ரதத்தையும் சாரதியாகிய மாதலியையும் ராமனுக்காக அனுப்பி வைத்தான்.

தேவராஜனின் தேரில்ராமன் ஏறினன். பலவிதமான மந்திர பாணங்கள் பறந்தன.

ராவணன் ஒரு சமயம் சோர்ந்துபோய் ஆயுத-மில்லாமல் நின்ருன். ராவணனுடன் போர் செய்த சோர்விலும், அவனை வெல்லும் மார்க்கத்தைப் பற்றிய சிந்தனையுடனும் ராமன் இருந்தான். அப்பொழுது அகத்திய முனிவர் அங்கு வந்தார். சத்ருக்களை ஜெயிக்க வல்லதும், ஆயுளை நீடிக்க செய்வதும், சகல துக்கங்களையும் போக்கக்கூடியதுமான ''ஆதித்ய ஹிருதயத்தை'' உபதே சித்தார். ராமனும் மிகுந்த சிரத்தையுடன் அதை மும்முறை ஜெபித்து புதுத் தெம்புடன் ராவணனை எதிர்த்தான்.

ராவணனது பத்து தலைகளும் நூறுதடவை அறுத்து எறியப்பட்டும் அவை மீண்டும் வளர்ந்து கொண்டே இருந்தன.

முடிவில் பிரம்மாஸ்திரத்தை எடுத்து ராமன் விட, மார்பு துளைக்கப்பட்டு ரதத்திலிருந்து கீழே விழுந்து ராவணன் மடிந்தான்.

தேவர்கள் பூமாரி பொழிந்தனர். விபீஷணன் இறந்து கிடந்த அண்ணன் ராவணனைக் கட்டித் தழுவி அழுதான். ராவணனது பிரியமான மனைவி மண்டோதரி ராவணனின் பிரேதத்தின் மீது விழுந்து மூர்ச்சையானாள்.

## ஸ்ரீராம பட்டாபிஷேகம்

ராமனின் ஆணைப்படி விபீஷணன் லங்காபுரியின்



அரசனுய் பதவி ஏற்ருன். 'விபிஷண மன்னனின் அனுமதி பெற்று சீதையை சந்தித்து நடந்து முடிந்து விட்ட யுத்தத்தைப் பற்றித் தெரிவி...'' என்று அனுமானுக்கு அன்பு கட்டளையிட்டான் ராமன்.

அனுமான் சீதையைக் கண்டான். சீதை ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். ராமனை சந்திக்க விரும்பும் ஆசையை அனுமானிடம் தெரிவித்தாள். சகல ஆபரணங்-களையும் அணிந்து, குனிந்த தலை நிமிராமல், ராமன் முன்பு வந்து நின்ருள் சீதை.

வானர சேனைகளும், நண்பர்களும் களிப்பால் ஆரவாரம் செய்தனர்.

உலக வழக்கத்தை ஒட்டி அக்னி வளர்த்து அதில் பிரவேசித்து மாசுக்குறையாமல் வெளி வந்து அண்ணலின் கையைப் பற்றி நின்ருள் சீதை.

இலங்காவாசிகளும் வானர சைனியங்களும், சீதா ராமனுடன் அயோத்திக்கு வர ஆவலாக இருந்தனர்.

ராமன் எல்லோருடனும் குபேரனுடைய புஷ்பக விமானத்திலேறி அயோத்திக்குப் புறப்பட்டான். வரும் வழியில் ராமன் எல்லா இடங்களையும் சீதைக்குக் காட்டினன்.

பரத்வாஜர் ஆசிரமத்திற்கு வந்ததும் அவரது வற்புறுத்தலினல் அங்கேயே தங்கி பரதனுக்கு தகவல் சொல்ல அனுமானை நந்திக் கிராமத்திற்கு அனுப்பினன்.

அனுமானல் காட்டில் நடந்த விருத்தாந்தங்-களையும், ராவண சம்ஹாரத்தையும் ராமனின் வரவையும் அறிந்த பரதன் ஆனந்தமடைந்தான்.

சிறிது நேரத்தில் ராமன் வந்த விமானம் நந்திக் கிராமத்தை அடைந்தது. ராமா! ராமா! என்று கூவி ஆரவாரித்தனர் ஜனங்கள். வெகுநாட்களுக்குப் பிறகு ராமனைக் கண்ட உவகையில் ஒருவருக்கொருவர் ஆலிங்கனம் செய்து கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

உணர்ச்சி மிக்த ஜனங்கள் கூடியிருந்த அந்த இடம் ஆரவாரமிக்க கொந்தளிக்கும் கடல் போல் காட்சி அளித்தது அதுவரை பூஜித்து வந்த ராமனின் பாதுகைகளை பரதன், ராமனின் பாதங்களில் அணிவித்தான்.

பிறகு ராமன் தீக்ஷைகளைந்து விரதம் முடித்துக் கொண்டான். பரிமள மிக்க சுகந்த நீரில் நீராடி சிறந்த ஆடை ஆபரணங்கள் பூண்டு திவ்ய சுந்தரரூபனாக விளங்கினான்.

அயோத்திநகர் ஆனந்த வெள்ளத்தில் மிதந்தது. அன்னையர்கள் அரவிந்த லோசனனான ரகுநாதனைக் காண ஆவலுடன் காத்திருந்தனர்.

அசோகர், விஜயன், சுமந்திரர் முதலிய மந்திரிமார்கள் பட்டாபிஷேகத்திற்காக நகரை அலங்கரிக்க ஏற்பாடு செய்தனர். வசிட்டரும், புரோகிதர்களும் மங்களப் பூர்வமான காரியங்களை கவனித்தனர்.

சாரதியான சுமந்திரன் உத்தம அசுவங்கள் பூட்டிய ராஜ ரதத்தைக் கொண்டுவந்து நிறுத்தினான். மிகச் சிறந்த அந்த ரதத்தில் ராமனும், சீதையும், சுக்ரீவன், அனுமான் முதலியவர்களுடன் ஏறிக் கொண்டனர்.



சுமந்தரரை பக்கத்தில் வைத்துக் கொண்டு பரதன் சாரத்யம் செய்ய, சத்ருக்கனன் குடை பிடிக்க, லெட்சுமணனும், விபீஷணனும் வெண்சாமரம் வீச, ரதம் அயோத்தி நோக்கிப் புறப்பட்டது.

மங்களவாத்தியங்கள் முழங்க, மங்கலதிரவியங்களுடன் மங்கையர்கள் முன்னே செல்ல, மத்தளம் பேரிகை துந்துபியுடன் நாதஸ்வரம் முழங்க, அழகிய பெண்கள் நாட்டியமாட, அந்தணர்கள் வேத கோஷ முழங்க அயோத்தி வந்தடைந்தனர்.

கொடிகளாலும், மலர்களாலும், தோரண வாயிலுடன் கூட அலங்கரிக்கப்பட்டிருந்த அயோத்தி மாநகர் இந்திர லோகம் போல் காட்சி அளித்தது.

பராக்கிரமமுள்ள வானரர்கள் நான்கு சமுத்திரங்களிலிருந்தும் 500 புண்ணிய நதிகளிலிருந்தும் பட்டாபிஷேகத்திற்காக தீர்த்தத்தை குடங்களில் கொண்டு வந்தார்கள்.

இக்ஷ்வாகு குல சக்கரவர்த்திகளுக்கு குருவாகிய வசிஷ்டர் பிராமணர்களுடைய அனுமதி பெற்று ஸ்ரீராமனை சீதாதேவியுடன் கூட ரத்னமயமான சிம்மாசனத்தில் அமர்த்தினார்.

வசிஷ்டர், வாமதேவர், ஜாமாலி, காஸ்யபர், காத்யாயனர், ஸீயஞ்ஞர், கௌதமர், விஜயர் என்ற எட்டு மஹாத்மாக்களும் வேதோக்த மந்திரங்களை ஜபித்து ஸ்ரீராமச்சந்திரனை, திவ்ய பரிமள புண்ய தீர்த்தங்களால் விதிப்படி பட்டாபிஷேகம் செய்தார்கள். ஆகாயவீதியில் திக்பாலர்களும், தேவகணங்களும் நின்று பார்த்து ஆனந்தமடைந்தார்கள்.

சீதா ராமனுக பட்டாபிஷேகம் நடைபெற்ற மகிழ்ச்சியில் அனைவரும் திளைத்தனர். பிறகு பரதனுக்கு யுவராஜா பட்டாபிஷேகம் நடைபெற்றது.

அண்ணலின் கையிலிருந்து ஒரு முத்து மாலையை வாங்கி சீதை அனுமானிடம் கொடுத்து ஆசீர்வதித்தாள்.

அனுமான் மகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்—தான்.

தர்மம் தலை நிமிர்ந்தது.

சுபம்.



ஸ்ரீ பரமாச்சாரியார்—

## விழியொளியால் வழிகாட்டும் தெய்வம்

கரும்பதனை கையிலேந்தி
காமாட்சி ஆட்சி செய்யும்
கல்லெல்லாம் கவி பாடும்
காஞ்சி நகர் தன்னில்
கண்டு கொண்டேன்
கண்ணில் நீர் மல்க
மண்ணில் மலர்ந்தே
தவழ்ந்து வரும்
மாதவத்தின்-கதிரவனை

இலக்கே மதமாக
இறுமார்ந்து போர் தொடுத்தே
மாண்டே மடியும் மனிதரிடை
இறையுணர்வே மூச்சென்று
இளைத்தே ஊன்-குன்றி, "பக்தி"
பேரொளியின் பெருஞ்சுடரை
இளநிலா பிறையெனவே
குளிர் நிலவாய் குளிரவைத்து
உவட்டாமல் திகட்டாமல்-உலகோர்க்கு
அள்ளியே வழங்கிவரும்
அருட்கடவுள் நடைபயிலும்
அழகதனை கண்டு கொண்டேன்

இன்பக்கடல் ஊற்றெடுத்து
இதயமும் நனைந்ததுவே
நினைவெல்லாம் உனையேந்தி
தாங்கும் இதயங்கள்
கனத்திடுமோ, தவித்திடுமோவென
எண்ணமதை தனில்கொண்டே
தவமே வடிவெனவே
உருக்கினையோ ஊனதனை

விழியொளியில் வழி காட்டும் கடவுளே
உன் 'நினைவை உயிர் தாங்கும்
ஊனுடலை பெற்று விட்டேன்
யான் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையமென
ஆற்றுப்படுத்தியே (அனைவரையும்)
அண்ணல் உந்தன் பாதம் பற்றியே
அன்புடன் அமைகிறேன்.

**கோ. சிவம்**



## எரிந்து கொண்டிருக்கிற தீபங்கள்

[காஞ்சி காமகோடி பெரியவர் பற்றிய கவிதைப் பூ]

அதோ...
தரைக்கு
வந்திருக்கிற
தயாள மேகம்
காற்றை மட்டும்
தின்று கருணையைக்
கக்கும் அத்வைதக்
குழந்தை
ஆன்ம பலம்
தருகின்ற
அட்சய
பாத்திரம்
வேதப் பறவைகளின்
வேடந்தாங்கல்
ஞானக் கோயிலின்
மூல விக்ரகம்.
அந்த...
ஞான பீடத்தின்
முகப்பில்

நாம்

என்றுமே

எரிந்து

கொண்டிருக்கிற

தீபங்கள்!

—எஸ். ஜெயந்திநாதன்

(சுதம்பவனக் கவிதைகள்)